[குஹாலயப் பிரசுரம் 9



# குஹாலயமும், அதன் கொள்கைகளும்.

குஹதாஸ் போதனைகளும், ஜீவ யாத்ரீகர்கள் அநுஷ்டிக்கவேண்டிய பல விஷயங்களும் அடங்கியது.

S. நரஸிம்ம தாஸ் M. A., இயற்றியது.
(A Follower of Guhalaya)

பிரசுரகர்த்தா.—
காரியதரிசி, குஹாலயம்
சேங்காலிபுரம் P. O. (தஞ்சாவூர் ஜில்லா)

காப்பிரைட்] 1943. [ரூபா. 1
[தபால் சார்ஜ் தனி]

*First Edition,—1000 Copies.*
*1943 October.*

Copy Right Registered.
All Rights Reserved.

**By Guha Das (S. V. Nataraja Iyer)**
Sengalipuram P. O. (Tanjore Dt.)

**Printed at the**
**Sri Janardana Printing Works, Ltd.,**
**Kumbakonam.**

॥ ओं श्री गुरवे नमः ॥

## ஸ்ரீ ஜகத்குரு அநுக்ரஹ லிகிதம்.

காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சந்திர சேகரேந்திர ஸரஸ்வதீ ஸ்வாமிகள் அவர்களினது அநுக்ரஹ லிகிதம் :—

Camp. Tennur. File No. G. C. 525 /1942-43. 31—5—1943.

ஸ்ரீமான் குஹதாஸ் அவர்களுக்கு,

தாங்கள் செய்து கொண்டிருக்கும் லோகோபகாரமான கைங்கர்யங்கள் விஷயத்தில் ஸ்ரீமத் ஸ்வாமிகள் அவர்கள் அத்யந்தம் ஸந்தோஷிக்கிறார்கள். தாங்கள் இவ்விதமே மேன்மேலும் ஸத்காரியங்களைச் செய்துகொண்டு பகவத் கிருபையினால் ஸகல ச்ரேயஸ்களையும் அடைய வேண்டிய தென்னும் இந்த அநுக்ரஹத்தை தங்களுக்குத் தெரிவிக்கும்படி ஸ்ரீமத் ஸன்னிதானத்தில் ஆஞ்ஞாபித்தபடி தெரிவிக்கலான காரியம். ஸ்ரீமத் ஸந்நிதானத்தில் அநுக்ரஹித்த ப்ரஸாதம் இத்துடன் அனுப்பப்பட்டிருக்கிறது.

(Sd.) T. V. Lakshminarayana Sastry,
*Agent.*

॥ ओं श्री गुरवे नमः ॥

## குஹதாஸரது முகவுரை (அர்ப்பணம்)

॥ तेन बिना तृणमपि न चलति ॥

॥ Trust in God And Do The Right ॥

॥ सत्यं वद ॥ सत्यमेव जयति ॥

॥ तन्नो हंसः प्रचोदयात् ॥

॥ लोकाः समस्ताः सुखिनो भवन्तु ॥

குஹாலய கோஷ்டியைச் சேர்ந்த பக்த சிகாமணி ஸ்ரீ S. நரஸிம்ம தாஸ், M. A., "குஹாலயமும், அதன் கொள்கைகளும்" எனும் இந்நூலுக்கு ஓர் முகவுரை எழுதித்தரவேண்டுமென தாஸனை மிகுந்த அன்புடன் தூண்டுகின்றார். ஸமஸ்த ஜீவன்களினது ஹ்ருதய குஹையில் வஸிக்கின்ற—ஸர்வ சக்தி வாய்ந்த—எங்கும் வியாபித்துள்ள — பிரகாசித்துள்ள — இரண்டற்ற—ஓர் ப்ரணவப் பொருளின்கண்—ஸதா ரமிக்கின்ற—அவ்வுணர்வு நிலையை அடைய அநுதபிக்கின்ற—அதற்குத் தேவையான அநுஷ்டானங்களைப் பின்பற்றுகின்ற—இவைகளுக்கு உதவியாக ஸத்ஸங்கத்தை நாடுகின்ற—முக்கியமாக குருபாதத்தை ஆச்ரயிக்கின்ற — எல்லாத் தேசங்களிலும், மதங்களிலும், கொள்கைகளிலும் உள்ள—உத்தம யோகிகளினது,

ஞானிகளினது, பக்தர்களினது பாதகமலத்தில்—இந் நூலை—ஹ்ருதய பூர்வகமான நமஸ்காரங்களுடன்—தாஸன் ஸமர்ப்பணம் செய்வதே ஓர் சிறந்த முக வுரையாகு மென்பதைப் பக்தஉலகுக்குப் பறைசாற்று கின்றேன். மேலும், தலைப்பில் கண்டுள்ள ஐந்து உத்தம உபதேசங்களை ஜீவயாத்திரீகர்கள் அடிக்கடி அநுஸந்தானம் செய்யவும், அதன் வாயிலாக ஸகல இஹ-பர க்ஷேமங்களை அடையவும் தாஸன் பிரார்த் திக்கின்றேன்.

नत्वहं कामये राज्यं न स्वर्गं नापुनर्भवम् ।
कामये दुःखतप्तानां प्राणिनामार्तिनाशनम् ॥

"நான் ராஜ்யத்தை விரும்பவில்லை. ஸ்வர்க்கத்தை விரும்பவில்லை. மறு பிறவி இல்லாமையை (மோக்ஷ த்தை) விரும்பவில்லை. (பலவித துக்கங்களினால் தபிக்கின்ற (ஸமஸ்த) ஜீவன்களது பீடைகளின் நாசத்தை விரும்புகின்றேன்.

॥ शुभमस्तु ॥

"குஹாலயம்"
சேங்காலிபுரம். P. O.,
(தஞ்சாவூர் ஜில்லா)
1943 அக்டோபர் 10.

குஹதாஸ்

॥ ओं श्री गुरवे नमः ॥

## கிரந்த கர்த்தாவினது முன்னுரை.

शरीरं सुरूपं तथा वा कलत्रं
यशश्चारु चित्रं धनं मेरुतुल्यम् ।
गुरोरङ्घ्रिपद्मे मनश्चेन्न लग्नं
ततः किं ततः किं ततः किं ततः किम् ॥

"அழகிய சரீரம், அவ்விதமே மனைவி, (யாவருக்கும்) பிரியமானதும், ஆச்சரிய முள்ளதுமான கீர்த்தி, மேரு பர்வதத்துக்குச் சமானமான தனம் முதலியன ஒருவனுக்கு இருக்கலாம். அவனது மனம் குருவினது பாதகமலங்களில் பதியாவிட்டால் (மேற்கண்ட) அவைகளினால் யாது பிரயோஜனம்?"—ஸ்ரீ சங்கராச்சாரியார்.

"குஹாலயமும், அதன் கொள்கைகளும்" எனும் உத்கிருஷ்டமான இந்நூலை ஒருவாறு வரையும்படிக் குஹாலயக் காரியதரிசி தாஸனுக்கு அறிவித்துள்ளதை ஓர் பெருமையாகக் கருதுகிறேன். மேலும், பக்த உலகின்கண் இந்நூல் நன்கு பரவத் தாஸன் ஓர் வியாஜமாக இருப்பது தாஸனது பாக்கியமாகும். சுமார் எண்வருஷ முன்பே இந்நூலில் வரையப்பட்

டுள்ள பல விஷயங்களைத் தாஸன் நன்கறிவேன். இந்நூலை நன்கு பூர்த்தி செய்ய இன்னும் தேவையான சில முக்கிய விஷயங்களை (Materials) தாஸனுக்கு மிகுந்த அன்புடன் அறிவித்துள்ள குஹாலய கோஷ்டியினர்களான ஸஹோதரர்கள் ஸ்ரீ ராம் தாஸ், ஸ்ரீ R. சிவதாஸ், ஸ்ரீ S. V. மஹாதேவதாஸ், ஸ்ரீ T. U. லக்ஷ்மணதாஸ், B. A., ஸஹோதரி விசாலாக்ஷி அம்மாள் முதலியவர்களுக்குத் தாஸனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்நூலுக்கு முற்றிலும் அநுபவங்கள் வாய்ந்த ஓர் முகவுரையை அர்ப்பணம் வாயிலாக வரைந்து கொடுத்தத் தாஸனது குரு ஸ்ரீ குஹதாஸ் அவர்களுக்கு 'உடல், பொருள், ஆவி'களை ஸமர்ப்பிக்கின்றேன்.

தன்னயம் கருதி, தயையின்றி ஏன்றேவொன்று இகலும் இப் பிரபஞ்சத்திலே, வெளிவேஷம் அதிகரித்து, வாய்ப் பேச்சுடன் நின்று, உண்மையான பகவத் பக்தி காணப்படா இக்காலத்திலே, இந்திரிய ஸுகம், மமகாரம், தனம் முதலியவைகளை அல்லும், பகலும் நாடி, அவைகளிலேயே ஆழ்ந்து மூழ்கியிருப் போர்களினது மத்தியிலே, அத்யாத்ம ஞானமாகிய அஹக்கண்ணையும், உத்கிருஷ்டமான அநுபவ உணர்ச்சிகளையும், ஆத்ம குணங்களையும் அடைந்துள்ள

ஸ்ரீ குஹதாஸ் தோன்றியிருப்பது உலகின் க்ஷேமார்த்தமெனவே உத்தம பக்தர்கள் எண்ணுவார்கள். மேலும், பரந்த உலகின்கண் தற்காலம் அதிவேகமாகத் தாண்டவமாடும் பலவித யுத்தங்கள், பற்பல அதர்மங்கள், பலபல கொடிய விஷ எண்ணங்கள், நாநாவித துஷ்டச் செயல்கள் முதலியவைகளுக்குக் காரண பூதங்களாக இருக்கும் அநாத்ம அஸுரர்களை நன்கு தகனம் செய்ய அத்யாத்ம தபோக்நி தான் வலுக்கொண்டதென்பது அநுபவிகளினது ஸித்தாந்தம். இவைகளை நாம் முன்னோர்களினது சரிதங்கள், உபதேசங்கள் வாயிலாக உணர்கின்றோம். ஸகல ஜீவன்களும் இத்தபோக்நியை அணையவிடாது மேன்மேலும் விருத்தி செய்யவும், அதன் மூலமாக ஸகல துக்கங்களை நிர்மூலம் செய்யவும், இஹ-பர க்ஷேமங்கள் யாவற்றையும் அடையவும், குஹதாஸ் ஸதா தனது ஆழ்ந்த பிரார்த்தனை ஆவியினது அலைகளை மேனோக்கிச் செலுத்தி வருவதில் உத்தம பக்தர்கள் யாவரும் கலந்துகொள்ளத் தாஸன் மனமுடன் வேண்டுகின்றனன்.

न भोगे न योगे न वा वाजिराज्ये
न कान्ता सुखे नैव वित्तेषु चित्तम् ।
गुरोरङ्घ्रिपद्मे मनश्चेन्न लग्नं
ततः किं ततः किं ततः किं ततः किम् ॥

“போகம், யோகம், அச்வம், ராஜ்யம், மனைவியி டம் ரமித்தல், தனம் முதலியவைகளினின்று வைராக்கியம் அடைந்துள்ள (ஒருவனது) மனம் குரு வினது பாதகமலங்களில் பதியாவிட்டால் (மேற் கண்ட வைராக்கியத்தினுல்) யாது பிரயோஜனம்? —

ஸ்ரீ சங்கராச்சாரியார்.

Coimbatore,
3rd June, 1943. } **S. Narasimha Iyer.**

॥ ओं श्री गुरवे नमः ॥

**காரியதரிசியினது முன்னுரை.**

சென்ற சில வருஷகாலமாகக் குஹாலய பக்தர் களில் சிலர் அடிக்கடி கடிதங்கள் வாயிலாகவும், நேரி லும் “குஹாலயமும், அதன் கொள்கைகளும்” எனும் விஷயத்தை பக்த உலகின்கண் பலர் அறிய ஆவலுள்ளவர்களாக இருப்பதாகவும், அந்நூலைச் சீக்கிரம் வெளிவரச் செய்ய வேண்டுமென்றும் மிகுந்த அன்புடன் நம்மைத் தூண்டுகின்றனர்கள். மேலும், சில பக்தர்கள் “ஸர்வம் குஹமயம் ஜகத்” என அவர்களினது கடிதங்களில் குறிப்பிடுகின்றனர் கள். ஓர் பக்தியுடன் இவ்வாக்கியத்தை அடிக்கடி அநுஸந்தானமும் செய்கின்றனர்கள். அவர்கள் தங் களது தியான காலங்களில் அவ்விதம் உணர்கின்ற னர்கள் போலும். அவ்வுத்தம பக்தர்களினது பிரார்த் தனையை இனிமேலும் தாமதம் செய்ய நாம் அஞ்சு கின்றோம். ஓர் கொள்கையை (Cult) நன்கு அறிந்து, நம்பி உணர்ந்து, நிஷ்காமியமாக அநுஷ்

டிக்கின்ற ஜீவயாத்திரீகர்களான நபர்கள் பத்து எனும் எண்ணிக்கையைக் கடந்துவிட்டால் அக்கொள்கைக்கு ஓர் பராமரிப்பு (Organisation) பல விஷயங்கள் நிமித்தம் அவசியம் தேவை என்பதை நாமறிவோம். மேலும், பரம்பொருளினது அருள் பிரவாகத்தினால் குஹாலயத்தில் இதுகாறும் நூற்றுக்கணக்கான பக்தர்கள் உபதேசம் அடைந்துள்ளனர்கள். ஆயிரக் கணக்கில் போதனைகள் பெற்றுள்ளனர்கள். மேன் மேலும் குஹாலயக் கொள்கைகளில் பலர் ஈடுபட்டு வருகின்றனர்கள். இக்காரணங்களினால் "குஹா லயமும், அதன் கொள்கைகளும்" எனும் விஷயம் பற்றி ஒருவாறு சுருக்கமாக, இந்நூலினது முதற் பதிப்பு மூலம் வெளியிடும்படி குஹாலய கோஷ்டி யைச் சேர்ந்த நமது ஸஹோதரர் ஸ்ரீ S. நரஸிம்ம தாஸ், M. A., (S. Narasimha Iyer, M. A., Superintendent, District Board Engineer's Office, Coimbatore) அவர்களுக்கு அறிவித்தோம். அதனை அவர் மிகுந்த அன்புடன் ஒப்பினதற்கு நமது மனமார்ந்த வந்தனங்களை ஸமர்ப்பிக்கின்றோம். ஜீவ யாத்திரையின்கண் ஓர் திடநம்பிக்கையுடன் ஈடுபட் டுள்ள ஸஹோதர, ஸஹோதரிகள் இந்நூலைச் சற்றும் பேதபுத்தி இல்லாதும், ஏகாக்ர சித்தமுட னும், சாந்தத்துடனும் படித்தறியவும், மனனம் செய்யவும், அதில் பதிந்துள்ள விஷயங்களை அநுஷ் டிக்கவும் நாம் மனமுடன் கேட்டுக்கொள்ளு கின்றோம்.

இந்நூல் வெளிவரும்படி அநுக்ரஹித்த காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதீ, ஸ்ரீ ரமண மஹரிஷி — இவ்விரு மஹான்களுக்கு நமது ஹ்ருதய பூர்வகமான நமஸ்காரங்களை ஸமர்ப்பிக்கின்றோம். இந்நூலை விரைவில் பிரசுரம் செய்யும்படி அடிக்கடி தூண்டிய குஹாலய கோஷ்டியைச் சேர்ந்த புதுக்கோட்டை ரிடயர்டு ஸப் போஸ்டுமாஸ்டர் ஸ்ரீ R. சாமிநாத அய்யர், இப் பிரசுரத்தை விரைவில் அச்சிட்டுக் கொடுத்த ஸ்ரீ ஜனார்தந பிரஸ் மானேஜர் ஸ்ரீ S. கல்யாண ஸுந்தரமய்யர்—இவ்விருவர்களுக்கும் பகவான் இஹ-பர க்ஷேமங்களை வர்ஷிக்க மனமுடன் பிரார்த்திக்கின்றோம்.

குஹாலயப் பிரசுரங்கள் வாயிலாகக் கிடைக்கும் வருமானத் தொகை "அத்யாத்மப் பயிற்சி, பகவதாராதனை, ஸங்கீதம், பஜனை, இவைகளினது பிரசாரம்" முதலிய ஸத்விஷயங்களில் பகவதர்ப்பணமாக விநியோகிக்கப்படும். உத்தம பக்தர்களான ஸஹோதர-ஸஹோதரிகள் யாவரும் குஹாலயப் பிரசுரங்களையும், கொள்கைகளையும் மனப்பூர்வமாக ஆதரிக்க வேண்டப் படுகின்றனர்கள்.

ओं शान्तिः । ओं शान्तिः । ओं शान्तिः ॥

"குஹாலயம்"
சேங்காலிபுரம் P. O.,
(தஞ்சாவூர் ஜில்லா)
1943 அக்டோபர், 10.

காரியதரிசி.

# விஷயங்கள்.


| | | பக்கம். |
|---|---|---|
| | ஸ்ரீ ஜகத்குரு அநுக்ரக லிகிதம் ... | iii |
| | ஸ்ரீ குஹதாஸரது முகவுரை. ... | iv |
| | கிரந்தகர்த்தாவினது முன்னுரை. ... | vi |
| | காரியதரிசியினது முன்னுரை. ... | ix |
| 1. | குஹாலயம் ... ... | 1 |
| 2. | குஹாலயப் பிரவேசம் ... ... | 5 |
| 3. | குஹதாஸ் ... ... | 9 |
| 4. | குஹதாஸரது குருக்கள் ... ... | 15 |
| 5. | குஹதாஸ் போதனைகள் ... ... | 29 |
| 6. | குஹதாஸ் உபதேசம் செய்யும் முறை ... | 39 |
| 7. | குஹதாஸ் காலம் போக்குவது ... | 42 |
| 8. | குஹாலயக் கொள்கைகள்... ... | 47 |
| 9. | குஹாலய தர்மங்கள் ... ... | 51 |
| 10. | குஹாலய [illegible]ற்சவங்கள் ... ... | 54 |
| 11. | குஹாலயப் பிரசுரங்கள் ... ... | 55 |
| 12. | கிரந்தகர்த்தாவினது முடிவுரை ... | 65 |
| | குஹாலய போஷகர்கள்... ... | 67 |
| | குஹாலய கோஷ்டினர்கள் ... | 68 |
| | பக்தர்களினது உதவி ... ... | 75 |

॥ ओं श्री गुरवे नमः ॥

॥ लोकाः समस्ताः सुखिनो भवन्तु ॥

# குஹாலயமும், அதன் கொள்கைகளும்.

---

I. குஹாலயம்:-முதன் முதல் குஹாலயத்தைப் பற்றி எடுத்துக்கொள்வோம். குஹாலயம்பற்றியும், குஹதாஸ் பற்றியும் பலர் பலவிதமாக அபிப்பிராயப் படுகின்றனர்கள். சிலர் 'குஹாலயம்' என்பது ஸ்ரீ ஸுப்ரம்மண்யக் கடவுளினது ஆலயமாக இருக்கலாமென்றும், அவ்வாலயக்கடவுள் ஆகமரீதியாகக் குருக்களினால் (சிவாசாரியார்களினால்) பூஜிக்கப்படலாமென்றும், சிலர் வைதீக மார்க்கமாக அவ்வாலய வழிபாடுகள் நடைபெறலாமென்றும் எண்ணுகின்றனர்களென்பதை நாமறிவோம். சிலர் இஃது ஒரு மடம் அல்லது ஆச்ரமமாக இருக்கலாமெனவும், அதன்

தலைவர் ஸ்ரீ குஹதாஸ் ஒரு ஸந்யாஸி, அல்லது அதி வர்ணாச்ரமியாக இருக்கலாமெனவும், இவர் சில சமயம் ஒரு மடம் அல்லது ஆச்ரமத்தில், அல்லது ஒரு கோவில் அல்லது மரத்தடியில் வசிக்கலாமெனவும், மற்றும் சிலர் இவர் போஜனம் செய்யாதிருக்கலாம், அல்லது பக்தர்களினால் ஸமர்ப்பிக்கப்படுகின்ற பால், பழங்களை உட்கொள்ளலாமெனவும் எண்ணுவதையும் நாமறிவோம். 'குஹாலயம்' என்பது குஹதாஸுக்கு வம்ச பரம்பரையாகக் கிடைத்துள்ள ஓர் இல்லமாகும். அவ்வில்லம் (சுமார்) $25\frac{1}{2} \times 163\frac{1}{2}$ அடிகளுள்ள அளவுள்ளது. உபநிஷத்துகளினது உபதேசத்தைப் பின்பற்றி அவ்வில்லத்தினது கீழ்புறத்தில் (சுமார்) $8\frac{1}{4} \times 16\frac{1}{2}$ அடிகள் அளவுள்ள ஓர் அறை (Prayer Hall) தியான நிமித்தம் தனியாக அமைக்கப்பட்டுள்ளது. இவரது இல்லத்துக்குக் 'குஹாலயம்' எனப் பெயர் ஏற்பட்ட காரணத்தைப் பக்தர்களுக்கு அறிவிக்கின்றோம். காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதீ ஸ்வாமிகள் அவர்களை குஹதாஸ் பகவானால் தூண்டப்பட்டவராக ஓர் பிக்ஷை தனது இல்லத்தில் நடைபெறப் பிரார்த்தித்து அழைத்தனர். ஸ்ரீ ஜகத்குருவினது பாதகமலம் தனது இல்லத்தில் பதியவேண்டுமென்பது இவரது அவா. ஸ்ரீ ஜகத்

குரு இவரது ஹ்ருதய பூர்வகமான பிரார்த்தனையை மனமுடன் அங்கீகரித்து இவரது இல்லத்துக்கு 1920-ஞு பிப்ரவரி-மீ 14௳ சனிக்கிழமை தினம் விஜயம் செய்தனர். ஸ்ரீ ஜகத்குரு லோகக்ஷேமார்த்தம் தான் அநுஷ்டித்துவருகிற பூஜை, பக்தர்களை பிரஸாத வாயிலாக அநுக்ரகித்தல் முதலிய பஹிர் விஷயங்களை அவ்வில்லத்தினது கூடத்திலும், தியானம், நிஷ்டை முதலிய ஆந்தரீக விஷயங்களை தியான அறையிலும் தானுக ஏற்படுத்திக்கொண்டனர். அன்று தினம் ஸ்ரீ ஜகத்குரு அவ்வில்லத்தில் பல பக்தர்களையும், வித்வான்களையும், பாமரர்களையும் ஸமதிருஷ்டியுடன் அநுக்ரஹித்தனர். மறுதினம் காலை அவ்வில்லத்தினின்று ஸ்ரீ ஜகத்குரு புறப்படு முன்பு, ப்ராம்மீ முகூர்த்தத்தில் குஹதாஸரைத் தனிமையில் அழைத்து கீழ்கண்டவாறு உரைத்தனர்:

உன் தமயனது பெயர் ராமஸ்வாமி. உனது பெயர் நடராஜன். உனது தமயனைக் கௌரவிக்கும் நிமித்தமாகவும், இக்கிரஹம் உன்னைச் சேர்ந்ததென்று எண்ணியும் ஒருக்கால் "ராம் ராஜ் விலாஸ்" என இக்கிரஹத்துக்கு நீ பெயரிட்டிருக்கலாம். இக்கிரஹத்தில் ஒரு தினம் தங்கிய காலத்திலேயே நான் ஓர் சாந்த ஆவியை நன்கு உணர்கின்றேன். த்வந்து

வங்களுக்கு அப்பாலுள்ள சாசுவத ஆனந்தம் உனது தியான அறையில் குடிகொண்டுள்ளதை நான் பிரத்தியக்ஷமாகப் பார்க்கின்றேன். இவ்வறையில் நுழைந்த நாஸ்தீகனும் பகவதருளைப் பெறுவான். ஆஸ்தீகர்களைப் பற்றிச் சொல்லுவானேன். இதர தெய்வங்கள், மதங்கள், அநுபவிகள், கொள்கைகள், உபாஸனைகள், அநுஷ்டானங்கள் முதலியவைகளில் இவ்வறையில், பிரவேசிக்கிறவர்கள் பேத புத்தியைக் கிஞ்சிற்றும் காணுர்கள். நீ "ப்ரணவ ஸுப்ரம் மண்யம்" பரமாக அத்யாத்மப் பொருளினிடம் நெருங்கிவருவதினுலும், அத்வைதமான, ஸூஷ்டுவான, ப்ரும்மமான ஓங்காரப் பொருள் உனது லக்ஷ்யமாதலினுலும், அப்பொருள் உனது ஹ்ருதயகமலத்தினுள் ஸதா குடிகொண்டிருப்பதினுலும் இத்தியான அறைக்கு (இவ்வில்லத்துக்கும் கூட) இனறையதினம் நான் 'குஹாலயம்' என நாமகரணம் சூட்டுகின்றேன். உலக க்ஷேமார்த்தமாகவே உனது தியானம், பகவதாராதனை, மற்றுமுள்ள காரியங்கள் எல்லாம் யாதொரு விக்நமில்லாது நடைபெறட்டும். மேலும், நடமாடும் குஹாலயமாக நீ இருந்துவா. இருக்குமிடத்திலும், போகுமிடங்களிலும்

உனது அத்யாத்ம ஆவி நன்கு பரிணமிக்கட்டும். ["நாராயணு" என ஸ்ரீ ஜகத்குரு மும்முறை சிறிய குரலில் சாந்தமாக உச்சரித்து, சற்று நேரம் தியானத்தில் அமர்ந்து பிறகு குஹால யத்தை விட்டகன்றனர்.]

அன்றைய தினமுதல் குஹதாஸரது இல்லம் "குஹாலயம்" என வழங்கப்பட்டுவருகின்றது.

**2. குஹாலயப் பிரவேசம் :—** குஹாலயத்தில் உத்தம பக்தர்கள் பிரவேசித்தவுடன் அனுபவ வாக்கி யங்கள் நிறைந்த ஆறுவித படங்களைக் (Boards) காண்பார்கள். அவ்வாக்கியங்களை ஒவ்வொரு ஜீவ யாத்திரீகனும் நன்கு அநுஸந்தானம் செய்யவேண்டு மெனப் பிரார்த்தித்து அடியில் வரைகின்றோம் :—

(1) **உபநிஷத்து வாக்கியங்கள்:**

सत्यं वद ॥ धर्मं चर ॥ आचार्य[illegible] भव ॥ मातृदेवो भव ॥ पितृदेवो भव ॥ अतिथिदेवो भव ॥

(2) **குஹாலய பஞ்சரத்கம் :—**ஹே, ஜீவா! பகவானைத் திடமாக நம்பு. ஹ்ருதயத்தை நன்கு சுத்தி செய். ஸத்தியமே ஸதா ஜயிக்கும். சாந்தம் எந்நிலையிலும் தேவை. குரு பாதத்தை ஆழ்ந்து பிடி.

(3) **குஹதாஸ் போதனை:—** ஸத்யம் தான் ஜயிக்கும். சாந்தம் எந்நிலையிலும் தேவை. பகவந்நாமம், பஜனை, பூஜை, மந்திர-ஜப-தபங்கள், ஜகாக்ரியம், தியானம், ஸமாதி — இவைகள் முறையே மேலாம். இவைகளுக்கு யமம், நியமம், ஆஸனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை முதலியன உதவிகளாம். கூட, அஹிம்ஸை, பிரும்மசரியம், அநுபவிகளினது ஸங்கம், சிரத்தை, விடாமுயற்சி, திடநம்பிக்கை முதலியன அவசியங்களாம். இந்திரிய நிக்ரகம், மனோநிக்ரஹம், எந்நிலையிலும் திருப்தி, ஒன்றிலும் பற்றில்லாமை, தயை, திரிகரண உதவி, அடக்கம், ஆத்ம-அநாத்ம விசாரணை—இவ்வெட்டுப் புஷ்பங்களிலும் பரம்பொருளுக்குப் பிரியமாம்.

(4) **பெரியோர் வாக்கியம்:—**தெய்வத்தை நம்பு. நியாயமாக நட. பிறர் உனக்கு எதைச் செய்ய விரும்புவாயோ அதையே நீ பிறருக்குச் செய்.

(5) **Homely Blessings:-** With Faith dwells Love, With Love dwells Peace, With Peace dwells Bliss, With Bliss dwells Good, With Good dwells Plenty.

(6) **Homely Virtues** :—The Beauty of Home is Cleanliness. The Honour of Home is Friendliness. The Blessing of Home is Godliness. The Richness of Home is Cheerfulness.

பிறகு, பக்தர்கள் ஸ்ரீ கிருஷ்ணன், லக்ஷ்மீதேவி முதலிய தெய்வங்களினது, ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்ஸர், அவரது சீஷர்கள் முதலிய மஹாஅநுபவிகளினது படங்கள் பலவற்றைத் தர்சனம் செய்வார்கள். மேலும், அங்கு குஹதாஸரது பிதா, சங்கீத குருக்கள் - இவர்களினது படங்களும், காமகோடி பீடாதிபதி, புஷ்பகிரி பீடாதிபதி-இம்மஹான்களினுல் குஹதாஸுக்கு "அத்யாத்மயோகம், ஸங்கீதம், பஜனை" முதலிய கிரந்தங்கள் விஷயமாக அநுக்ரஹிக்கப்பட்டுள்ள ஸ்ரீமுக படங்களும் தென்படும். சென்ற 1934 வருஷம் டிசம்பர்-மீ 19௨ காசீ க்ஷேத்திரத்தில் ஒரு பெரிய வியாபாரியும், உத்தம பக்தருமான ஸ்ரீ துர்காப்ரஸாத் என்பவரினுல் நன்கு செதுக்கப்பட்டதும், குஹாலய கைங்கரியமாக சேர்ப்பிக்கப்பட்டதும், ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதீ அவர்களினுல் அநுக்ரஹிக்கப்பட்டதும், ஸம்ஸ்கிருத பாஷையில் உள்ளதுமான "ஓம் ஸ்ரீ குஹாலயம்" எனும் அழகிய சலவைக்கல் (Marble Tablet) குஹாலயத்

தியான அறையின் முன்பு பதிப்பிக்கப்பட்டுள்ளது. தியான அறையில் ஜீவயாத்திரீகர்கள் பிரவேசித்த வுடன் ஸ்ரீ குஹதாஸரது பாவனையை அநுஸரித்து அத்யாத்ம யோக ரீதியாக எழுதப்பட்டுள்ள ப்ரணவ ஸுப்ரம்மண்யம், மற்றும் பல தெய்வங்களில், பல மதங்களில், பல கொள்கைகளில் ஈடுபட்டுள்ள, பல தேசத்தினர்களான, பல உபாஸகர்கள், குஹதாஸ ரது மந்திரயோக, அத்யாத்ம யோக குருக்கள்— இவர்களினது படங்களைக் கண்டானந்திப்பார்கள். [குறிப்பு:— இப்பிரணவ ஸுப்ரம்மண்ய படம் ஸ்ரீ மைத்ரேயர், ஸ்ரீ சங்கராச்சாரியார், ஸ்ரீ அருணகிரி நாதர் முதலிய மஹான்களினது உபதேசங்களை குஹதாஸ் தமது ஹ்ருதய கமலத்தில் பதிப்பித்து அநுஷ்டிக்கின்றவாறு வரையப்பட்டுள்ளது] மேலும், இவ்வறையில் ஓர் அழகிய புஸ்தக கோசம் (Library) உண்டு. அஃதில் பல மதங்கள், பல கொள்கைகள், பல உபாஸனைகள், யோகம், ஞானம், பக்தி முதலியனபற்றி பல கிரந்தங்கள் பல பாஷை களில் இருக்கின்றன. சுருக்கமாக உரைக்கின், அவ் வறையின்கண் ஆஸ்தீகர்கள் ஸமதிருஷ்டியைக் காண்பார்கள். நாஸ்தீகர்கள் பேத புத்தியைச் செலுத்தார்கள். அநுபவிகள் ஆனந்தத்தை அடை வார்கள். ஜீவயாத்திரீகர்கள் ஓர் சக்தியை உணர்

வார்கள். பக்தர்கள் பக்தியினது பரிணமிப்பைப் பார்ப் பார்கள். பாமரர்கள் வாழ்நாள் வீணுகின்றனவே என பரிதபிப்பார்கள். அநுதாபிகள் முயற்சியைக் கடைப்பிடிப்பார்கள்.

**3. குஹதாஸ்:** [குறிப்பு:— "ஸ்ரீ குஹதாஸ் ஜீவிய சரிதம்" விபரமாக விரைவில் வெளிவரும். இந்நூலினது தேவைக்கு மாத்திரம் சுருக்கமாக இவ் விடம் வரைவோம்.] இவர் தென்னிந்தியாவிலுள்ள தஞ்சை ஜில்லா சேங்காலிபுறம் கிராமவாஸி. இக்கி ராமத்தினது நான்கு புறங்களிலும் நான்கு பெரிய ஆலயங்களும், நான்கு பெரிய தடாகங்களும் இருக் கின்றன. நான்கு எல்லைகளுக்குள் சில கிராம தேவ தைகளினது ஆலயங்களும் உண்டு. ஆலய வழிபாடு கள் நன்கு நடைபெறுகின்றன. இக்கிராமத்தில் அழ காக அமைந்துள்ள சில தெருக்கள் உள்ளன. இக் கிராமம் மிதமான சிதோஷ்ண ஸ்திதி உள்ளது. நான்கு ஜாதியினர்களும் வஸிக்கின்றனர்கள். பல வேத வித்துகளும், பக்தர்களும், பண்டிதர்களும், தனவந்தர்களும் இக்கிராமத்தில் வம்ச பரம்பரையாக உள்ளவர்கள். அநேகமாக எல்லோருக்கும் ஆஸ்தீக சிந்தனையும், தர்ம சிந்தனையும் உண்டு. ஸ்ரீ குஹ தாஸ் கர-ஸு சித்திரை-மீ 29உ (1891-ஸு மே-மீ 10உ) ஞாயிற்றுக்கிழமை இப்பூவுலகில் தோன்றியவர்.

இவர் பிறந்த காலையில் மூன்று நல்ல கிரஹங்கள் உச்சஸ்தானத்தில் இருந்தன. இவரது பெற்றோர்கள் வம்ச ஆச்சாரியரது அபிப்பிராயத்தை அநுஸரித்துத் தங்களது குழந்தைக்கு "நடராஜன்" என நாமகரணம் சூட்டினார்கள். இவனது பிதாவினது பெயர் வைத்தியநாத அய்யர்; மாதாவினது பெயர் தய்யம்மாள். இவரது பிதா உத்தம பரம்பரையினர். த்ருடபக்தர். நல்ல புஷ்டியுள்ள தனவந்தர். தர்மமே உருவெடுத்தவர். 'பதினெண்கிராம வாத்திமர்கள்' எனும் பிரிவைச் சேர்ந்தவர். 18 கிராம வாத்திமர்களும் இவரைத் தங்கள் பிரிவினது தலைவரென ஓர் பெருமையுடன் ஒரே அபிப்பிராயமாகச் சொல்லுவார்கள். நடராஜனது தாயாரும் நல்ல பரம்பரையில் பிறந்தவர். தனது பதியை மெய்யன்புடன் பின்பற்றிய பதிவ்ருதையாவார். இவனது பிதாவு[க்கு] இரண்டு மனைவிகள். முதல் மனைவிக்கு நாராயணஸாமி எனும் ஓர் குமாரனும், சுப்பாளு, தய்யு எனும் இரு குமாரிகளும் பிறந்தனர்கள். முதல் மனைவியும் உத்தம பரம்பரையில் பிறந்தவர் தாம். முதல் மனைவி பரலோகம் சென்ற பிறகு இவனது பிதா தய்யம்மாளை இரண்டாவது மனைவியாக விவாகம் செய்துகொண்டார். இரண்டாவது மனைவிக்கு பெரியநாயகி, விசாலாக்ஷி, மீனாக்ஷி

எனும் மூன்று குமாரிகளும், ராமஸ்வாமி, நடராஜன் எனும் இரண்டு குமாரர்களும் பிறந்தனர்கள். நடராஜன் இப்பெற்றோர்களினது எட்டாவது குமாரனுவான். பிறகு இத்தம்பதிகளுக்குச் சந்ததி ஏற்படவில்லை. தற்காலம் விசாலாக்ஷி, மீனாக்ஷி எனும் இருவர்கள் தாம் நடராஜனுக்கு ஜீவதசையுடன் இருக்கும் ஸஹோதரிகள். மற்ற ஸஹோதர - ஸஹோதரிகள் ஐவரும் பரவுலகு சென்றுவிட்டனர்கள். நடராஜனது பெற்றோர்களின் வம்சம் பல கிளைகளுடன் பல இடங்களில் பரவியுள்ளது.

சென்ற 1930-வது ஆண்டில் பக்த உலகின் முன்பு ஸ்ரீமான் S. V. நடராஜ அய்யர் முற்றிலும் அநுபவங்கள் கொண்ட "அத்யாத்ம யோகம் அல்லது ஆத்மப்பயிற்சி" எனும் ஓர் கிரந்தத்தை "குஹதாஸ்" எனும் புனைப்பெயருடன் வெளியிட்டுள்ளதைப் பல பக்தர்கள் அறிவார்கள். அக்கிரந்தத்துக்குப் பல ஆதாரங்களுடனும், அநுபவங்களுடனும் ஓர் சிறந்த "முகவுரை" ஜில்லா ஜட்ஜ் திவான்பகதூர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களினுல் எழுதப்பட்டுள்ளது. அதில் ஸ்ரீ சாஸ்திரியார் "......இந்நூலாசிரியர் தாம் மறைத்துவைத்த தம்முடைய இரகஸ்யத்தை நான் வெளியிடுவதற்கு ஒப்பமாட்டாரென்பதை அறிவேன்.

ஆயினும் இவரினும் நான் வயதில் முதிர்ந்தோனாதலால் (இக்காலத்தில் இதனால் யாதொரு ஸ்வதந்திரமும் கிடையாதெனினும் ஒரு சிலர் இன்னும் இதற்குக் கௌரவம் வைத்திருக்கின்றனர்) அவ்வுரிமை கொண்டு இவரை மறைத்திருக்கும் திரையை நீக்குகிறேன். இவர் பெயர் S. V. நடராஜய்யர் என்பது...'' என மிகுந்த அன்புடன் குறிப்பிட்டுள்ளார். அக்காலம் முதல் S. V. நடராஜய்யரது புனைப்பெயர் "குஹதாஸ்'' என்பது பக்த உலகில் பரவிற்று. மேலும் இவர் ஸர்வசக்தி வாய்ந்த பரம்பொருளைத் தமது ஹ்ருதய குகையில் ஸதா ஆராதித்து வருவதினால் "குஹதாஸ்'' எனும் பெயர் தெய்வ ஸங்கற்பமாக ஏற்பட்டது போலும். சென்ற இருபத்தாறு ஆண்டுகளுக்கு மேலாக இவர் உலகின் கண்ணுள்ள பல மதங்கள், கொள்கைகள், உபாஸனைகள், அனுஷ்டானங்கள் முதலியன பற்றியும், பல காலங்களில் உலகின் க்ஷேமார்த்தம் அவதரித்துள்ள அத்யாத்ம அநுபவிகள் பற்றியுமுள்ள அரிய விஷயங்களை ஊக்கமுடன் கற்றுணர்ந்தவர். ஆத்மாநுபவத்தில் ஈடுபடாதவராய், வாய் வேதாந்தத்தில் வல்லவராய், வாதம் தொடுப்பதில் சிறந்தவராய், பிடிவாதத்தைப் பின்பற்றுபவராய் உள்ள மத, கொள்கை, உபாஸனை வாதிகளைக் காண இவர் வாடி வெதும்புவார்.

"மதம்" (मतम् - ஹ்ருதய குகையின் கண் உணரப்படும் பொருள்) என்பதை (मदम् - கொழுப்பு) என்பதுடன் கலவை செய்ய இவர் நடுங்குவார். சுருக்கமாகக் கூறின், "ஆத்மாநுபவமே உண்மை மதம்" என இவர் வற்புறுத்துவார். உபநிஷத்துகள், கீதை, யோக சாஸ்திரம் முதலிய அநுபவக் கிரந்தங்களில் பதிந்துள்ள அத்யாத்மப் பொருளை வேண்டியே பல ஆண்டுகளாகத் தம்மை இவர் ஆத்ம ஸமர்ப்பணம் செய்துவருகின்றார். "ஸமஸ்த ஜீவன்களும் பரம்பொருளை அத்யாத்ம வாயிலாக நாடி சாசுவத ஆநந்தத்தைப் பெறவேண்டும்" என இவர் ஓர் ஆழ்ந்த பிரார்த்தனை கொண்டவர். மேலும், ஸ்ரீ குஹதாஸ் ஸங்கீத சாஸ்திரத்தில் நிபுணர். பேச்சுடன் நிற்காது தீவிரப் பயிற்சியும் பெற்றவர். ஆங்கிலத்திலும், தமிழிலும் ஸங்கீத விஷயமாகப் பல நூல்களை வரைந்துள்ளார். சென்ற 1920-வது ஆண்டில் "தென்னிந்திய ஸங்கீதம்" (Ragas of Tanjore) எனும் ஓர் ஆராய்ச்சி நூல் இவரால் வரையப்பட்டு, மேனாட்டில் பிரசுரம் செய்யப்பட்டு, பல நாட்டினர்களினால் போற்றப்பட்டுள்ளதைச் சங்கீத உலகம் அறியும். பள்ளிக்கூடங்களிலும், கலாசாலைகளிலும் ஸங்கீத வித்யையைப் புகுத்த நிரம்பவும் இவர் பாடுபட்டுள்ளவர். கூட, நாதப்பிரும்ம வித்யையை ஓர் வியாபாரமாகப் பற்றாது

ஆத்மார்த்தமாக உபாஸிப்பவர். உத்தம பக்தர்கள் நிறைந்துள்ள கோஷ்டியில் தமது கீதத்தை வெளியிடுபவர். பல தர்மஸ்தாபனங்களின் பொருட்டு நமது சென்னை மாஹாணத்தில் மாத்திரமல்லாது இதர மாஹாணங்களிலும் பக்திரஸம் ததும்பிய பல ஸங்கீதக் கச்சேரிகள் செய்துள்ளவர். ஸங்கீதம், பகவத் பக்தி— இவ்விரண்டும் ஒன்றை விட்டு ஒன்று அகன்று செல்லுமிக்காலத்தில் இவைகளை ஒன்றுபடுத்தவேண்டுமென்பது இவரது பேராவல்.

ஸ்ரீ குஹதாஸ் ராஜீய விஷயங்களிலும் ஈடுபட்டுள்ளதை ராஜீய உலகம் நன்கு அறியும். சென்ற 1911 முதல் 1920-வது ஆண்டு முடிய ராஜீய விஷயங்களில் நிரம்பவும் உழைத்தவர். தற்காலம் வெளியில் இவர் உழைப்பதாகத் தோன்றுவிட்டாலும், தமது உள்ளில் ஸமஸ்த உலகினர்களினது இஹ - பர க்ஷேமங்களைப் ப்ரார்த்தனை வாயிலாகத் தேடிவருவதைப் பக்த உலகினர் அறிவார்கள்.

ஸ்ரீ குஹதாஸ் அதி பால்யம் முதற்கொண்டே பகவத் பக்திவலையிற் சிக்கியவரென "அத்யாத்ம யோகம்" நூலிலுள்ள "பிரார்த்தனை" அத்யாயத்தை ஊடுருவிப் பார்க்கப் புலப்படுகிறது. அவரது ஒரு பிரார்த்தனையைக் கீழே குறிப்பிடுவோம் ;—

பிரார்த்தனை, 4. பரம மங்களத்தைக் கொடுக்கும் பரமசிவனே! அதி பாலனான தாஸனை பன்னிரண்டாவது வயதில் மூன்றாவது ஜாம நல் நிசியில் மாரிகாலத்தில் எழுப்பிக் குட்டையில் மூழ்கச் செய்து நிர்க்குணமாக உன்னை ஒரு முகூர்த்தம் தியானிக்க அருள் புரிந்தவனே! 'அழகு வாய்ந்த ஓம் ஸ்ரீ ஸுப்ரம் மண்யோம்' எனும் பிரும்மத்தில் மூழ்கச் சரி யான காலத்தில் குமாரன் ஸுப்ரம்மண்யனை அனுப்பினவனே! இரண்டல்லாத ஒன்றில் தாஸன் கலக்க உனது குமாரனுக்கு இன்னும் சிபார்சு செய்வாயாக.

**4. குஹதாஸரது குருக்கள்:** (1) **மந்திரயோக குருக்கள்.** சென்ற 1908-வது ஆண்டு முதல் குஹ தாஸ் மஹாபாரதம், பாகவதம் முதலிய உத்தம கிரந்தங்களை பிரதிதினமும் நிரம்பவும் பக்தியுடன் பாராயணம் செய்து வந்தனர். 1916-ளு பிப்ரவரி மாதம் 10உ தஞ்சை ஜில்லாவில் உள்ள திருவிடை மருதூர் ஸப் போஸ்டுமாஸ்டரும், ஸ்ரீ ஸுப்ரம்மண்ய உபாஸகருமான ஸ்ரீ S. ராமஸ்வாமி அய்யரிடம் ஓர் ரக்ஷை (Amulet) நிமித்தம் இவர் சென்றனர். அவ் வுபாஸகர் "சில க்ரஹங்களினால் சில பீடைகள்

உனக்குச் சம்பவிக்கும். அவைகள் நிவர்த்தியாகும் பொருட்டு நான் சொல்லுகிற வாக்கியங்களை ஒரு மண்டலம் (45 தினங்கள்) தினம் 45 ஆவர்த்திகளுக்குக் குறையாது ஜபித்து வருவது நலம்" என அன்புடன் உரைத்தனர். ரக்ஷையையும் கட்டினர். அவ் வாக்கியங்களையும் குறித்துக் கொடுத்தனர். குஹ தாஸ் 45 தினங்கள் மாத்திரம் ஜபித்தது போதுமென நினையாது 1917-வது ௵ ஜூன்-மீ 1௳ வரையில் ஜபித்துவந்தனர். பிறகு ஒரு பக்தரினால் தூண்டப்பட்டு 1917-௵ மார்ச்சு-மீ 11௳ தமது வம்ச ஆச்சாரியார் பிரும்மஸ்ரீ வாஞ்சிசாஸ்திரிகள் மூலமாக ஸ்ரீ கணபதி, ஸ்ரீ ஸுப்ரமண்யம்-இவ்விரு தெய்வங்களின் பூஜையை இவர் எடுத்துக்கொண்டனர். வம்சாசாரியார் "வாரம் இருமுறை (செவ்வாய், வெள்ளிக் கிழமை) பூஜை செய்வது போதும். ஏனெனில் உனக்கு குடும்ப பாரம் ஜாஸ்தி" என இவரிடம் உரைத்தனர். ஆனாலும் குஹதாஸ் தமது குடும்ப வேலைகளை ஒரு வாறு சரிசெய்துகொண்டு (Adjust) பிரதி தினமும் பூஜையை நடத்திவந்தனர். வம்சாசாரியார் இவரது த்ருடபக்தியைப் பார்த்து நிரம்பவும் சந்தோஷித்தனர். கொஞ்சகாலத்துக்குப் பிறகு 1917 ௵ ஜூன்-மீ 1௳ பிரும்மஸ்ரீ M. R. ஸுந்தரேச சாஸ்திரிகள் அவர்களிடம் ஸ்ரீ ஸுப்ரம்மண்ய பரமான

பஞ்சதசாக்ஷர மந்திரத்தைக் குஹதாஸ் உபதேசம் அடைந்தனர். ஸ்ரீசாஸ்திரிகள் மதுரை ஜில்லா மிளகனூர் கிராமத்தைச் சேர்ந்தவர். சாந்த சித்தம் உடையவர். மந்திரயோக வாயிலாகப் பகவானை ஆழ்ந்து உபாஸிப்பவர். மதுரை ஜில்லாவில் ஒரு ஆங்கிலக் கலாசாலையிலும், பிறகு ஒரு ஹைஹஸ்கூலிலும் தமிழ் பண்டிதராக இருந்தவர். இவர் குஹதாஸுக்கு மந்திர யோகத்தை ஏகாந்தத்தில் உபதேசித்த பிறகு "ஜபிக்கும் முறை, ஆசாரம், அநுஷ்டானம்" முதலியன பற்றிச் சில விஷயங்கள் அறிவித்தனர். மேலும் கீழ்கண்டவாறு தைரியம் ஊட்டினர்:—

க்ஷேத்ராடனம் செய்வது, புண்ணிய நதிகள், ஸாகரம் முதலியவைகளில் நீராடுவது முதலியவைகளைப் பார்க்கிலும் பகவானது பாதகமலத்தை ஜபம், தியானம் முதலியன வாயிலாக எட்டுவது பலமடங்கு உயர்ந்ததாகும். மேற்கூறப்பட்டவைகளில் பிரியம் வைத்து அங்கும், இங்கும் ஓடுகின்றவர்களை நான் தடுக்கவில்லை. உனது மனோநிலைக்கு "ஜபம், தியானம், பூஜை, பாராயணம்" முதலியவைகள் தாம் அவசியமென எனது த்ருட அபிப்பிராயம். என்னால் உபதேசிக்கப்பட்டுள்ள இந்த "ஸ்ரீஸுப்ரம்மண்ய பஞ்சதசாக்ஷரம்" மந்திரத்தை பிரதிதினமும் ஏகாக்ர

சித்தமுடன் ஜபித்துவா. ஒரு மண்டலத்துக்குள் (45-தினங்களுக்குள்) இம்மந்திரத்தைப் பெரியோர்களின் உபதேசங்களை அனுஸரித்து பதினைந்து ஆயிர ஆவர்த்திகள் ஜபித்து விடு. கொஞ்சகாலத்துக்குப் பிறகு உனக்கு ஆறு ஆதாரங்களிலும் பரவியுள்ள ஆறுமுகனது தர்சனம் நிச்சயம் கிடைக்கும். மேலும் இம்மந்திரத்தை ஜபிப்பதுடன் என்னால் எழுதித்தரப்படுகின்ற, ப்ராசீனமான இந்த "ஸ்ரீஸுப்ரம்மண்ய ப்ரஸந்ந மாலா மந்திரத்தை பிரதிதினமும் பாராயணம் செய்து வரவேண்டும். இப் பிரஸந்ந மாலாவினது சக்தியைத் தேவர்களினாலும் வர்ணிக்க முடியாது. இவ்விரண்டையும் நன்கு கவனமுடனும், சாந்தமுடனும் அநுஷ்டித்துவா. உன்னைச்சுற்றியுள்ள ஸகல பீடைகளும், இடையூறுகளு[illegible] நிவர்த்தியாகும். பரம மங்களத்தை அடைவாய். பகவான் உனக்கும், உனது குடும்பத்தினர்களுக்கும், நண்பர்களுக்கும் இஹபர க்ஷேமங்களைக் பொழியட்டும்.

கூட, இம்மந்திர யோகியினால் குஹதாஸுக்கும் அவரது மனைவிக்கும் இரு ரக்ஷைகள் ஒரு மண்டலத்தில் கொடுக்கப்பட்டன. இப் பஞ்சதசாக்ஷர உபதேசம் பெற்ற தினம் பகல் சுமார் 3-0 P.M. மணிக்குக்

குஹதாஸனுக்கு எதிர்பாராத ஓர் அநுபவம் ஏற்பட்டது. அப்போது அவர் தனிமையில் இருந்தார். அவ்வநுபவத்தை குஹதாஸ் மறுதினம் தனது குரு, தாயார், தமக்கை ஸௌ. மீனாக்ஷி இவர்களிடம் உரைத்த சுருக்கத்தை பக்தர்களுக்கு அறிவிக்கின்றோம்:—

ஊஞ்சலில் உட்கார்ந்து சில பாக்களை மனனம் செய்துகொண்டிருந்தேன். வேறொருவரும் என் பக்கத்தில் இல்லை. காலையில் உபதேசிக்கப்பட்ட மந்திரமும், குருவினால் தைரியம் ஊட்டப்பட்ட வாக்கியங்களும் ஞாபகத்துக்கு வந்தன. உடனே நான்கு திக்குகள், கீழ், மேல் இவைகளிலிருந்து கிளம்பிய ஓர் சக்தி என்னுள் புகுந்தது. அச்சக்தி ஓர் பெரும் சுழல் காற்று சப்தம்போல் இருந்தது. அஃது எனது பாதம் முதல் சிரஸ் வரையில் பரவியது. சாக்ஷிபூதமாக இருந்து, நல்ல தைர்யத்துடன் அச்சக்தியைக் கவனித்தேன். மின்சாரம் போலுள்ள அச்சக்தி ஆகாயத்தை நோக்கியும் சென்றது. பிறகு சீதம்-உஷ்ணம், சுகம்-துக்கம், லாபம்-நஷ்டம், விருப்பு-வெறுப்பு, பிறப்பு-இறப்பு முதலான ரட்டைப்புக்களுக்கு அப்பாலுள்ள ஓர் ஆநந்தம் எனது ஹ்ருதய குஹையிலிருந்து பொங்கியது. அவ்வாநந்த ஊற்றை என்னால் அடக்கமுடியவில்லை.

பெரிய குரலில் சில வார்த்தைகளை நானாக என க்குச் சொல்லிக்கொண்டேன். அவைகளாவன. "என்னைப்பார்க்கிலும் இவ்வுலகில் ஓர் தன்யன் உண்டோ? பக்தன்உண்டோ? தீரன் உண்டோ? எனது குருவினால் உபதேசிக்கப்பட்ட மந்திரத்தி னது சக்தியினாலும், பகவானது கிருபையினாலும் நான் ஸகல க்ஷேமங்களையும் அடைவேன். என்னிடம் துஷ்டர்களும், கொடிய ஜந்துக்களும் நெருங்காது. ஒருக்கால் நெருங்கினால் அவைகளுக்கு ஆபத்துத்தான்" - இவ்வார்த்தைகளைச் சொன்ன பிறகு திடீரென ஊஞ்சலிலிருந்து கீழே குதித்தேன். கிழக்கு முகமாக நின்றேன். தியான அறையை நோக்கினேன். எதையோ சொல்லிக்கொண்டு அதிவேகமாகச் சுற்றிச் சுற்றி வந்தேன். பிறகு கீழும், மேலும் எழும்பி, எழும்பிக் குதித்தேன். இந்நிலை சுமார் கால் முகூர்த்தம் இருந்தது. பிறகு ஓர் களைப்பு ஏற்பட்டது. கீழே படுத்துவிட்டேன். அக்களைப்பில் அதிசாந்தம் குடிகொண்டிருந்தது. அச்சாந்தத்தை உற்றுநோக்கிய வண்ணமாகச் சுமார் முக்கால் முகூர்த்த காலமிருந்தேன். எழுந்தவுடன் உங்கள் மூவரையும் பார்த்தேன். ஆனால் அப்போது என்னால் பேச முடியவில்லை. பெரி

யோர்களினது ஆசீர்வாதம், குருவினது கடாக்ஷம், பகவானது அருள்—இம்மூன்றும், எனது ஜபம், தியானம், மற்றுமுள்ள காரியங்கள் — இவைகளை நான் ஏகாக்ர சித்தத்துடனும், சாந்தத்துடனும், பகவதர்ப்பணத்துடனும் நன்கு அநுஷ்டிக்க எனக்கு அவசியம் தேவை.

(2) **அத்யாத்ம யோக குரு:** சென்ற 1914-வது ஆண்டு முதல் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர், அவரது ஸங்கத்தைச் சேர்ந்த, அவரது அருமைச் சிஷர்களான ஸ்வாமி விவேகாநந்தர், ஸ்வாமி பிரும்மாநந்தர், துர்கா சரண நாகமஹாசயர் முதலிய மஹா அநுபவிகளினது ராஜமார்க்கத்தை அவர்களினது அநுபவக் கிரந்தங்கள் வாயிலாக குஹதாஸ் ஆராயத் தொடங்கினர். அதற்குத் தேவையுள்ள நூல்களை ஸ்ரீராமகிருஷ்ண மடத்திலிருந்து தருவித்தார். அவைகளை அதி கவனமுடன் ப[illegible]தனர்; மறுபடியும் படித்தார். அந்நூல்களில் பதிந்துள்ள, மதிக்கவொண்ணுத, குவியல்களாக உள்ள அநுபவங்களை ஏகாக்ர சித்தமுடனும், ஆழ்ந்த சாந்தமுடனும், பகவதர்ப்பணமுடனும் பிரதிதினமும் மனனம் செய்தார். ஆழ்ந்து மனனம் செய்யச் செய்ய "த்வந்துவங்கள் பல கொண்ட, 'அத்யாத்மிக, ஆதி பௌதிக, ஆதி தெய்வீக"ங்களான மூன்று வித தாப அக்னிகள் சூழ்ந்த,

பந்துவர்க்கச் சுழல்கள் பல உள்ள, காமக் குரோதா திகளான ஆறு வித சத்துருக்களினது வலைகள் விரிக் கப்பட்டுள்ள, 'தேஹ வாஸனை, லோக வாஸனை, சாஸ்திர வாஸனை'களான மூன்று வித நாற்றங்கள் நிறைந்த, ஆசை, பாசம் முதலிய இருவிதப் பேய் களினுல் பாதிக்கப்படுகின்ற, பல வித அநாத்ம அஸுரர்களினுல் பல விதங்களாகப் போர் தொடுக்கப் படுகின்ற, ஸத்ஸங்கம், ஆத்ம—அநாத்ம விசாரணை, ஐகாக்ரியத் தியான ஸமாதிகள், பூஜை, பஜனை, பாரா யணம் முதலான உத்தம அநுஷ்டானங்களைத் திட நம்பிக்கையுடன் பின்பற்றத் தடை செய்யும் ஜன்மாந் திரப் பாப அரண்கள் சூழ்ந்த, ஸதா வியாதி, தரித் திரம், ம்ருத்யு, பயம், கிலேசம், மனஸ்தாபம், ஜரை, பிறப்பு-இறப்புகள் முதலிய எண்வித உபத்திரவங்கள் அழையா விருந்தினங்களாக வருகின்ற, பிரபஞ்ச வாஸனைகள் நிறை[illegible] நண்பர்களினுல் தூண்டப்பட்ட 'நான், எனது, எதையும் செய்வேன்' எனும் அஹங் கார ராக்ஷஸர்களினுல் பீடிக்கப்படுகின்ற" ஸம்ஸார ஸாகரத்தினின்றும் கறையேறி, ஓங்கார நகருக்குச் சென்று, அங்கு ஆனந்திக்க, கானிக்க, நர்த்தனம் செய்ய, அஃதில் மூழ்க, லயிக்க, கலக்க, மறுமுறை ஒரு தாயினது பாலைப் பருகாதிருக்க இப்பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் தன்னை உத்தரணம்

செய்யும் பொருட்டும், ஸகல ஜீவன்களும் இஹ—பர க்ஷேமங்களைப் பகவதருள் வாயிலாக அடையும் பொருட்டும் இக்கொடிய பூவுலகில் அவதரித்து, அநுஷ்டித்து, உபதேசித்து அருளினரெனக் குஹதாஸர்து ஹ்ருதய ஸாகரத்தில் அடிக்கடி பலவித உத்தம எண்ண அலைகள் (Best Passing Thoughts) வீசிவந்தன. 1916-வது ஆண்டு முதல் இவரது ஹ்ருதய ஆகாயத்தில் பிரபஞ்சத்திலே ஒருவரிடமும் மூறையிடமுடியாத, சொல்லி ஆற்றிக்கொள்ள முடியாத பலவித கவலைகள் ஓர் பக்கத்திலும், மற்ெருரு பக்கத்தில் அதி சாந்தத்துடன் கூடிய ஓர் ஆனந்தமும் கொழுந்துவிட்டு எரிந்து வந்தன. 1917-வது ஆண்டு முதல் இவர் தனது ஹ்ருதய குகையில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரையும், ஸ்வர்ணத்தினல் செய்யப்பட்ட, அழகிய, தனது பூஜா விக்ரஹ தண்டபாணியையும் ஸகுணத் தியா[illegible] வாயிலாக பிரதி தினமும் காலே, மாலே, நிசி-மூன்று காலங்கள் ஏகாக்ர சித்தத்துடனும், சாந்தத்துடனும் ஆராதித்து வந்தனர். அவ்வருஷம் முதல் இவர் சென்னே போகும் காலங்களில் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தில் உள்ள ஸந்யாஸிகளேத் தர்சனம் செய்வதும், அங்கேயே தியானம் செய்வதும், பக்தி ரஸம் ததும்பிய ஸங்கீதக் கச்சேரிகள் செய்வதும், பஜனே செய்வதும் வழக்கம்.

அம்மடத்தில் உள்ள தோட்டக்காரன் முதல் பிரஸி டெண்டு வரையில் எல்லோரும் குஹதாஸருடன் ஹ்ருதய பூர்வமான அன்புடன் பழகி வருவார்கள். பிரஸிடெண்டு ஸ்வாமி ஸர்வாநந்தர் (இப்பொழுது டெல்லியில் உள்ள ராமகிருஷ்ண மடத்தில் இருக் கின்றனர்) தியானம், ஸங்கீதம் முதலியன வாயிலாக குஹதாஸ் பரம்பொருளிடம் நெருங்கி வருவதை யும், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரிடம் வைத் துள்ள ஆழ்ந்த பக்தியையும், அவ்விதமே மடத்தைச் சேர்ந்த ஸங்யாஸிகளிடமும், ஸ்ரீ ராமகிருஷ்ணரது உபதேசங்களைத் திட நம்பிக்கையுடன் பின்பற்று கின்ற க்ருஹஸ்தாச்ரமிகளிடமும் வைத்துள்ள பிரே மையையும் கண்டு ஆநந்திப்பார்; உத்தம பக்த கோஷ்டி முன்பு அவர் குஹதாஸரை அடிக்கடி அறிமுகம் செய்துவைப்பது உண்டு. 1926 ஆண்டு மார்ச்சு மாதம் 1[illegible] காலை ஸ்ரீ ஸ்வாமி ஸர்வாநந்தர் குஹதாஸரைத் தனிமையில் அழைத்தனர். தனக் கெதிரில் உட்காரும்படி தெரிவித்தனர். சற்று நேரம் தியானத்தில் இருந்தனர். "ஸதா எந்நிலையிலும் இவ் விதமே த்யானத்தில் இருக்கவேண்டும். தன்மயமாக வேண்டும்" எனச் சுருக்கமாக உரைத்தனர். பிறகு அவர் சற்று நேரம் மௌனத்தை அவலம்பித்துக் கண் மூடி மூன்று அக்ஷரங்களுள்ள, அத்யாத்மத்தைக் குறிக்

கின்ற ஓர் மந்திரத்தைக் குஹதாஸருக்கு மூன்று ஆவர்த்திகள் உரைத்து உபதேசித்தனர். இவ்வாறு உபதேசம் செய்த பிறகு ஸ்வாமி ஸர்வாநந்தர் குஹதாஸருக்கு போதனை செய்த வாக்கியங்கள் பின்வருமாறு:—

இந்த அத்யாத்ம அநுபவ மந்திரத்தை உனது ஹ்ருதய குஹையில் நன்கு பதி. அடிக்கடி அநுஸந்தானம் செய். எக்காலும் பக்தி நீரைப் பாய்ச்சு. ஸ்ரீ குருமஹராஜ் (ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்) நம்மெல்லோருக்கும் வழிகாட்டி வருவது ஸத்தியம். நீ வெள்ளை வஸ்திர ஸந்யாஸி. நான் காஷாய வஸ்திர ஸந்யாஸி. நமக்குள் வேறு வித்தியாசத்தை நான் காணேன். குருமஹராஜ் எல்லோருக்கும் அருள் புரியட்டும்.

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஸ்வாமி ஸர்வாநந்தர் மூலமாகத் தனக்கு அத்யாத்ம உபதேசம் செய்ததாகவே குஹதாஸரது ஆழ்ந்த பாவனை. மேல் வரையப்பட்டுள்ள சில வரிகளிலிருந்து ஸ்ரீ ஸ்வாமி ஸர்வாநந்தர் குஹதாஸரது அத்யாத்ம குரு என நாம் அறிகின்றோம்.

(3) **ஸங்கீத குருக்கள்:** [குறிப்பு:— ஸங்கீதம், பஜனை - இவ்விரண்டிலும் குஹதாஸ் ஈடுபட்டுள்ள

விஷயம் "குஹதாஸ் ஜீவிய சரிதம்" எனும் நூலில் விபரமாக வெளிவரும். ஆகையினல் இவ்விடம் சுருக்கமாக அறிவிப்போம்.] சென்ற 1908-வது வருஷத்தில் குஹதாஸ் காந்தர்வ வேதமான ஸங்கீத சாஸ்திரம் பயில ஆரம்பித்தனர். பிரபல ஸங்கீத வித்வான் தலைநாயர் ஸ்ரீ ஸோமு பாகவதர் குமாரர் ஸ்ரீ ராதாகிருஷ்ண அய்யரிடம் 1908 முதல் 1912-வது வருஷம் முடிய ஹார்மோனியமும், பிடிலும் அப்பியஸித்தனர். 1913-வது ஆண்டில் இவரது குரு சில வியாதிகளினுல் பீடிக்கப்பட்டார். அவரது உத்திரவைப் பின்பற்றி பிறகு கும்பகோணத்தில் வஸித்துவந்த பிடில் வித்வான் சாத்தனூர் ஸ்ரீ அநந்தராம அய்யரிடம் பிடிலும், வாய்ப்பாட்டும் 1913 முதல் 1916-வது ஆண்டு வரையில் அப்பியஸித்தனர். பிறகு தனது குருவினது உத்திரவின்படி குஹதாஸ் கச்சேரிகள் செய்ய ஆரம்பித்துவிட்டனர்.

(4) பஜனை ருக்கள் :-குஹதாஸருக்கு திருப்புகழ்மணியும், பிரபல அட்வகேட்டுமான சென்னை ஸ்ரீ T. M. கிருஷ்ணஸ்வாமி அய்யர், B.A , B.L., (இப்போது திருவனந்தபுறத்தில் Chief Justice ஆக இருப்பவர்) அட்வகேட் ஸ்ரீ V. நாராயண அய்யர் M. A., M. L., பக்த சிகாமணி ஸ்ரீ T. S.வெங்கட்ராமய்யர் முதலிய சில பக்தர்களினது

ஸத்ஸங்கம் தெய்வஸங்கல்பமாக 1923-ஹு டிசம்பர்-மீ 21௳ திருவையாறு க்ஷேத்திரத்தில் ஏற்பட்டது. பிறகு குஹதாஸ் சென்னை போகும் காலங்களில் இப் பக்தர்களினது கிருகங்களில் தங்குவது வழக்கம். இரு ஸமயங்களில் சென்னையில் தொடர்ந்து சுமார் ஆறுமாத காலங்கள் தங்க நேரிட்டது. அக்காலங்களில் இவர் இப்பக்தர்களினது பஜனையில் கலந்துகொள்ளுவார். இவ்வுத்தமர்களினது ஸத்ஸங்கத்தினுல் பஜனையில் இவருக்கு ஓர் அளவிலா விருப்பம் உண்டாகியது. [குறிப்பு:— இதற்கு முன்பு இவர் கச்சேரிகளில் விவகாரத்துடன் ஸ்வரம், பல்லவி முதலியன பாடுவதிலேயேத் தமது புத்தியை அதிகமாகச் செலுத்திவந்தனர். சென்னையிலிருந்து திரும்பியவுடன் தனது ஊரில் ஒரு பஜனை சபையை ஏற்படுத்தினுர். தானே பல பக்தர்களுக்கு பஜனை பாக்களைப் போதித்தனர்.] மேற் கூறியுள்ள மூன்று பக்தர்களையும் தமது பஜனை குருக்களென பஜனை விஷயமான உபந்யாஸங்களில் குஹதாஸ் குறிப்பிடுவதுண்டு. மேலும், கீர்த்தனம், அஷ்டபதி, அபங்கம், திருப்புகழ், முதலிய பாக்களை ஒரு வித்வானிடமோ அல்லது பக்தரிடமோ புதிதாக குஹதாஸ் பாடம் செய்தால் அவர்களை ஜாதி, அந்தஸ்து, குலம் முதலிய வித்தியாசங்கள் பாராது, தனது

குருக்களாக தமது ஹ்ருதயத்தில் பாவிப்பது வழக்கம். அவரது ஸங்கீத நூல்களினது கைப்பிரதிகளில் (Music Note Books) பக்தர்கள் இவ்விஷயத்தை இன்றைக்கும் பார்க்கலாம்.

(5) **வேதாந்தகுரு:**— குஹதாஸ் தமது 13-வது வயதில் ஸம்ஸ்கிருத பாஷை கற்க ஆரம்பித்தனர். திருவிசைநல்லூர் பிரும்மஸ்ரீ பாலகிருஷ்ண சாஸ்திரிகளிடம் சுமார் ஐந்துவருஷகாலம் "காவ்யம், சம்பு, நாடகம்" முதலிய கிரந்தங்கள் படித்தனர். 1917-வது ஆண்டு முதல் சுமார் ஐந்து வருஷங்கள் பிரும்மஸ்ரீ வித்யாரத்நாகர உ. வே. V.R. நரஸிம்மாச்சாரியாரிடம் "கீதை, உபநிஷத்துகள்" முதலிய அநுபவ வேதாந்த கிரந்தங்கள் அப்யசித்தனர். ஒரு விசேஷம் இங்கு உரைப்போம். ஸ்ரீ குஹதாஸரும், ஸ்ரீ V. R. நரஸிம்மாசாரியாரும் பரஸ்பரம் குருக்களும், சிஷ்யர்களும் ஆவார்கள். 1917-வது ஆண்டு முதல் சுமார் 5-வருஷகாலம் நரஸிம்மாசாரியார் குஹதாஸரிடம் நாதப்பிரும்ம வித்யையைக் கற்றனர். ஸ்ரீ நரஸிம்மாச்சாரியார் குடவாசல் எனும் ஊரைச் சேர்ந்தவர். சதுர்சாஸ்திர பண்டிதர். சாந்த சித்தமுள்ளவர். தற்காலம் சென்னையில் வஸிக்கின்றனர். [குறிப்பு. காமகோடி பீடாதி

யதி ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதீ, ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர், ஸ்ரீ ரமண மஹரிஷி இம் மூன்று மஹான்களும் ஸ்ரீ குஹதாஸரது "அத்யாத்ம" யோக பூமியில் (ஆத்ம நிஷ்டை காலத்தில்) பல தடவைகள் தோன்றி, முறையே உபதேச விஷயமான ஸம்பாஷணையும், தைர்ய வாக்யங்களும், "சுத்த ப்ரணவ" உபதேசமும் அருளியிருக்கின்றனர்கள். இவைகள் 'குஹதாஸ் ஜீவிய சரிதம்' நூலில் வெளிவரும்.]

5. **குஹதாஸ் போதனைகள்** :--(Spiritual Instructions) குஹதாஸ் உலக க்ஷேமார்த்தமாகவும், ஸமஸ்த ஜீவன்களும் "ஜகாக்ரியம், தியானம், ஸமாதி" வாயிலாக இஹ—பர க்ஷேமங்களை அடையும் பொருட்டும் பல நூல்கள் வெளியிட்டுள்ளதை பக்த உலகம் அறியும். அப்பிரசுரங்கள் எல்லாவற்றிலும் ஆழ்ந்த அநுபவங்கள் குவியல்களாக உள்ளன. ஒவ்வொரு வாக்கியத்தையும் உபதேசமாகப் பக்தர்கள் பாவிக்கின்றனர்கள். அவரது போதனைகளில் சிலவற்றைத் தந்திக் குறிப்பில் இச்சிறிய நூல் வாயிலாக அறிவிப்போம்.

(1) **பரம்பொருள் ஒன்றே** :—அஃதைப் பக்தர்கள் பகவான் என்றும், வேதாந்திகள் பிரும்மம் என்றும், ஞானிகள் வெட்டவெளி என்றும், அத்யாத்ம

யோகிகள் பரமாத்மா என்றும், பௌத்தர்கள் புத்தர் என்றும், ஜைனர்கள் அர்ஹர் என்றும், நையாயிகர்கள் கர்த்தா என்றும், கர்மடர்கள் தேவன் என்றும், மேலும் சைவர்கள் சிவம் என்றும், வைஷ்ணவர்கள் விஷ்ணு என்றும், கிறுஸ்துவர்கள் கிறுஸ்து என்றும், மஹம்மதீயர்கள் அல்லா என்றும், நாஸ்தீகர்கள் சூன்யமென்றும் பலவாருக அழைக்கின்றனர்கள். அப் பரம்பொருள் தான் ஒன்ருனுலும்,எவரெவர்கள் எவ்வெவ்விதமாக உபாஸிக்கின்றனர்களோ, அவ்வவ்விதமாக அவரவர்களினது மனேபாவனைகளை அநுஸரித்து பல தெய்வங்களாகப் பரிணமித்து அவர்களை அநுக்ரஹிக்கின்றது.

(2) **அப்பரம்பொருளினது வாஸஸ்தானம்** உனது ஹ்ருதயமே. அஃதிடம் ஜகாக்ரிய, தியான, ஸமாதி வாயிலாக நெருங்க வேண்டும். உனது மனதைத் துணையாகக்கொண்டு உன் ஹ்ருதய குஹையில் அப்பொருளை நாடவேண்டும். உனது சித்தத்திஞல் அடிக்கடி அஃதைச் சிந்திக்கவேண்டும். உனது புத்தியினது உதவியால் அஃதில் மூழ்க வேண்டும். உனது அஹங்காரம் எல்லாம் அற்று அப்பொருளுடன் கலக்கவேண்டும். பிறகு உனக்கு பிறப்பு-இறப்புகள் கிடையாது. மறுபடி ஒரு தாய் பாலைப் பருகமாட்டாய்.

(3) அப்பரம்பொருளை அடையப் பல மார்க்கங்கள் உண்டு. எல்லாவற்றிலும் அத்யாத்மயோகம் சிறந்தது. அபாயகரம் இல்லாதது. ராஜமார்க்கமானது. அதிவேகம் உள்ளது. இதர யோகங்கள், மார்க்கங்கள் முதலியன கர்ம பலங்களிலும், ஸித்திக் கிரமங்களிலும் ஆஸ்தைகளை மூட்டி ஜீவயாத்திரிகனைத் தடைசெய்யும்.

(4) அப் பரம்பொருளை ஆழ்ந்து அநுஸந்தானம் செய்ய பக்திரஸம் ததும்பிய ஸங்கீதம், பஜனை, பாராயணம்—இம் மூன்றிலும் ஜீவயாத்திரீகன் ஈடுபடுவது நலம். இம்மூன்றும் அத்யாத்மப் பாதையில் நிரம்பவும் உதவி புரியும்.

(5) அப்பரம்பொருளை எட்டுவதற்கு குரு அவசியம். ஓர் ஆத்ம நிஷ்டனிடம் உபதேசம் பெறுவது உத்தமம். மந்திர யோகியிடம் பெறுவது மத்திமம். மந்திர, தந்திர வியாபாரம் பண்ணுகின்றவனிடம் பெறுவது அதமம். குருவினது அநுக்ரஹம் பெற 'உடல், பொருள், ஆவி'களினுல் சுச்ரூஷை செய்வது அத்யாவச்யம். குருவினது மனம் குளிர்வது உனது க்ஷேமத்துக்கு அறிகுறி. அவரது மனம் தாபமடைவது உனது நாசத்துக்கு அஸ்திவாரம். அவரது கிருபையில்லாத உனது மந்திரம், தந்திரம்,

வேதம் ஓதல், பூஜை, பாராயணம், வ்ருதம், க்ஷேத்ராடனம் முதலியன எல்லாம் வீண். மாதா, பிதா, பந்துக்கள், நண்பர்கள் முதலியவர்களைக் காட்டிலும் பல மடங்குகள் உன்னைக் கார்ப்பவன் குருவே.

(6) **அப் பரம்பொருளை நன்கு வழிபட** ஓர் பிடி சாம்பலுக்கும் உதவாத இச்சரீரத்தை எல்லா விதங்களிலும் ஸம்ரக்ஷிக்கவேணும். நர ஜன்மம் கிடைப்பது அரிது. பக்தியுடன் கலந்த சரீரப் பயிற்சி அவசியம்.

(7) **அப்பரம்பொருளினிடம் தீரமாகப் பிரவேசிக்க** பிரும்மசரியம் தேவை. கிருஹஸ்த தர்மங்களை நன்கு பரிபாலிக்கின்ற தம்பதிகள் நாளடைவில் சிற்றின்பத்தை அறவே ஒழித்து பேரின்ப ஸாகரத்தில் நன்கு நீராடவேண்டும். ஸந்ததிகள் வைத்திய சாலைகளை நாடாமல் இருக்கவும், நியாயஸ்தலங்களில் திண்டாடாமல் இருக்கவும் பகவத் பக்தியை பால்ய பருவத்திலேயே புகட்டவேண்டும். மனதை அடக்கும் வித்யையை சந்ததிகளினது ஹ்ருதய பூமியில் பதிப்பிக்க வேண்டும்.

(8) **அப்பரம்பொருளினிடம் நெருங்க** சரீரம், மனம் இவ்விரண்டுக்கும் பலம் ஏற்படவேண்டும். மிதமான, எளிதில் ஜீரணம் ஆகக்கூடிய, காரமில்லாத

ஆகாரங்களை உட்கொள்ளவேண்டும். நாவினது ருசிக்கு இடம் கொடுக்காதே. விருந்துப் படியை நிறுத்திவிடு. கோப தாபங்களுடன் உணவு எடுக்காதே. கோபதாபங்களுடன் போடப்படுகின்ற போஜனத்தை உட்கொள்ளாதே. இவைகள் வியாதிகளுக்குக் காரணம். உபவாஸம் என போதிக்கப்படுகின்ற பட்டினியை ஜாக்ருதையுடன் அநுஷ்டி.

(9) **அப்பரம்பொருளினிடம் நாட** சரீர ஆரோக்கியம் இன்றியமையாதது. வியாதி உள்ளவன் வழிபடுவது சிரமம். பலம் செலுத்தப்படாத ஸுக ஆஸனம், பிராணயாமம்—இவ்விரண்டும் வியாதிகளை வரவொட்டாது தடை செய்யும். ஜன்மாந்திர கர்ம வியாதிகளை நிர்மூலம் செய்யும். நரம்புகள், இந்திரியங்கள், மனம், சித்தம், புத்தி, அஹங்காரம் முதலியவைகளைச் சுத்தி செய்யும். ஆரோக்கியத்தைக் கொடுக்கும்.

(10) **அப்பரம்பொருளினிடம் ரமிக்கவும், அதனுள் மூழ்கவும், அதனுடன் கலக்கவும்** ஜகாக்ரியம், த்யானம், ஸமாதி—இம்மூன்றும் அத்யாவச்யம். இம்மூன்றும் பலவித உபத்திரவங்களையும், இடையூறுகளையும், மாயைகளையும், அநாத்ம அஸுரர்களையும் வேரறுக்கும். இஹ—பர க்ஷேமங்கள் எல்லாவற்றை

யும் பொழியும். இம்மூன்று நாவங்கள் இல்லாது ஸம்ஸார ஸாகரத்தைத் தாண்டமுடியாது. ஓங்கார நகரை எட்டமுடியாது. ஜபம், ஸகுண-நிர்க்குண த்யானங்கள், ஆத்ம நிஷ்டை—இவைகளினது உதவி கொண்டு ஜீவயாத்திரிகன் அந்நகரினுள் பிரவேசிக்க வேண்டும்.

(11) **அப்பரம்பொருளை விக்னங்களில்லாது உபாஸிக்க** மனம் உருகிய, பக்திரஸம் ததும்பிய பிரார்த்தனை முக்கியம். பிரார்த்தனையினுல் எல்லா வற்றையும் அடையலாம். அஃதில்லாது ஒன்றையும் அடையமுடியாது.

(12) **போது விஷயச் சுருக்கம்:** ஸாது ஸங்கத்தை நாடு. கெட்ட ஸங்கத்தை அறவே ஒழி. அநுபவங்கள் நிறைந்த நற்கிரந்தங்களைப் பாராயணம் செய். வீண் பேச்சுகளை அடக்கு. அநுபவிகளினது சரிதங்களை மனனம் செய். பகவத் பக்தியை விருத்தி செய். திட நம்பிக்கையைக் கடைப்பிடி. வீண்பொழுது போக்காதே. நற்கர்மாக்களை நிஷ்காமியமாகவும்,பகவதர்ப்பணமாகவும் செய். சந்தோஷத்தில் தலைவிரித்தாடாதே. துக்கத்தில் ஒப்பாரி வைக்காதே. உபத்திரவத்தில் ஓலமிடாதே. எல்லாவற்றிலும் சாந்தத்தை அவலம்பி. சத்துருக்களை அன்பி

ஞல் வெல்லு. வம்பர்களினது சொல் அம்புகளை லக்ஷியம் செய்யாதே. எல்லா ஜீவன்களிடமும் ஸம திருஷ்டியைப் பதி. 'உடல், பொருள், ஆவி'களி ஞல் தர்மம் செய். எல்லா ஜீவன்களிடமும் ஸஹோ தர பாவனையைச் செலுத்து. எல்லா ஸ்திரீகளையும் உடன்பிறந்த ஸஹோதரிகளாக நினை. இதற சமயங்க (cults)ளுடன் நேசமாயிரு. நல்லவைகளைக் கைப் பற்று. பேத புத்தியை வைக்காதே. ஆசை, பாசம் —இவ்விருபேய்களுக்கு ஆளாகாதே. எல்லாக் கெட் டவைகளையும் நாசம் செய். எல்லா நல்லவைகளையும் பின்பற்று.

(13) **பிரதிதினமும் யோஜித்துப் பார்:** தினம் "எவ்வளவு நற்கர்மாக்களைச் செய்தாய்? எவ்வளவு துஷ்கர்மாக்களை செய்தாய்? எவ்வளவு சாந்தத்தை அவலம்பித்தாய்? எவ்வளவு நேரம் கோப தாபங்களி னது விஷ ஆவிகளுக்குத் தூபம் [illegible]பாட்டாய்? தன் னிலையில் எவ்வளவு இருந்தாய்? எவ்வளவு தடவை கள் நெருங்கிய பந்து வர்க்கங்களிடம் மித மீறிய பிரி யத்தைப் பதிப்பித்தாய்? நியாயமாகச் சம்பாதித்த பொருள் எவ்வளவு? சரீர, மனேப் பிரயாசைகள் இல்லாது எவ்வளவு பொருளைக் கொள்ளையிட்டாய்? நல் விஷயமாக எவ்வளவு தர்மம் செய்துள்ளாய்? கெட்ட காரியங்களில் எவ்வள்வு பொருளை விரயம்

செய்துள்ளாய் ? நல்ல ஸம்பாஷணைகளில் எவ்வளவு நேரம் சிந்தனை சென்றது ? கெட்ட பேச்சுக்களில் எவ்வளவு காலம் சிலவழிந்தது ? ஸஹோதர ஜீவன்களின் க்ஷேமத்தை எவ்வளவு தூரம் தேடியுள்ளாய் ? அவர்களிடம் எவ்வளவு த்வேஷ, அஸூய விஷக்காற்றைப் பிரயோகித்தாய் ? இவைகளினுல் எவ்வளவு இஹ-பர க்ஷேமங்கள் ஏற்பட்டன ? எவ்வளவு நாசங்களுக்கு விரையைப் பதிப்பித்தாய் ?" எனச் சற்றுநேரம் ஏகாந்தமாக யோஜித்துப் பார். பிறகு ஒருவரிடமும் வெறுப்புகளை வைக்கமாட்டாய். உன் மனமே உன்னை நன்கு சீர்திருத்தும். நல்வழி காட்டும். க்ஷேமங்களை அடைவாய்.

(14) **கடிதமூலம் போதனைகள்:** குஹதாஸ் தமது சிஷ்ர்களுக்கும், அநுதாபிகளுக்கும் கடிதங்கள் வாயிலாகப் போதனைகள் செய்வதுண்டு. அநேகமாக அவரது ஒவ்வொரு கடிதத்திலும் "பகவானது கிருபையினுல் உபயக்ஷேமம். தங்களது ஜபத் தியானங்கள், பாராயணம், மற்றுமுள்ள காரியங்கள் எல்லாம் ஏகாக்ர சித்தமுடனும், சாந்தமுடனும், பகவதர்ப்பணத்துடனும் ஸதா நடைபெற ஹ்ருதய பூர்வகமாகப் பிரார்த்திக்கின்றேன். அவ்விடத்து உத்தம பக்தர்களுக்கு தாஸனது மனப்பூர்வ நமஸ்காரங்களைத் தெரிவிக்கவும்" முதலிய வாக்கியங்கள்

தென்படும். அவரது கடிதங்களில் அதைர்ய வாக்கியம், அசுப வார்த்தை முதலியனத் தேடினலும் தென்படாது. சில பக்தர்கள் தங்கள் கடிதத்தில் ஒரே விஷயத்தை திருப்பித் திருப்பி, பக்கம் பக்கமாக, வரி வரியாக எழுதுவார்கள். ஒன்றுக்கும் அலுப்பைக் காட்டாது அவர்களினது சந்தேகங்களைப் போக்குவார். மேலும், குஹாலயத்துக்கு பிரதிதினமும் வருகின்ற தபால்கள், பார்ஸல்கள், ரிஜிஸ்டர்கள் முதலியன பகவானது ஸந்நிதியில் சற்றுநேரம் வைக்கப்பட்டுப் பிறகே கவனிக்கப்படும். அவ்விதமே குஹாலயமிருந்து எழுதப்பட்டுள்ள கடிதங்கள், பிரசுரங்கள் முதலியவற்றைப் பகவத் ஸந்நிதியில் வைத்த பிறகே தபாலாபீஸுக்கு அனுப்பப்படும். எக்காரியத்தையும் பகவதர்ப்பணமாகவே குஹதாஸ் செய்வது வழக்கம். ஆகையினல் அவரது கடிதங்கள் வாயிலாகவும் பல பக்தர்கள் பலவித க்ஷேமங்களை அடைந்துள்ளார்களென்றும், இனியும் அடைவார்களென்றும் நாம் அறிவிப்போம்.

(15) **பிரார்த்தனை, ஸங்கம் மூலமாகப் போதனைகள்.** (Through Prayer and Spiritual Contact) குஹதாஸ் தனது சீஷர்களோ அல்லது அநுதாபிகளோ, பகவத் விஷயமான போதனைகளைத் தான்

நேரில் சொல்லியும், கடிதமூலம் வரைந்தும், ஸஹ வாஸ தோஷத்தினுலோ அல்லது ஜன்மாந்திர கர்ம பாபத்தினுலோ அல்லது ஸந்தேகத்தினுலோ அல்லது அசிரத்தையினுலோ பின்பற்ருது வீணுகக் காலத்தைக் கழித்தால் அவர்களை மிகுந்த அன்புடன் கூவித் தனது பக்கத்தில் அமர்ந்து ஜபம், தியானம், பாராயணம் முதலியவைகளை சில வேளைகள் அநுஷ்டிக்கும்படி தெரிவிப்பார். இவர் "பகவானை வழிபடு. இடையூறுகளை நிர்மூலம் செய். க்ஷேமங்களை அடை" எனத் தனது உள்ளில் அழுது, வெளியில் கூவியும் அவர்கள் செவி சாய்க்காவிட்டால் அதற்காகச் சற்றும் அவர்களைக் கோபியார்; நிந்தனை செய்யார். தான் பகவானிடம் அவர்களினது இஹ-பர க்ஷேமங்கள் பற்றி ஆழ்ந்து பிரார்த்திக்கவில்லை எனத் தன்னை தனிமையில் தானே நொந்து கொள்ளுவார். கூட, இச்சமயத்தில் தன[illegible] சாந்த நிலையினது ஆழத்தை தம்முள் ஆழ்ந்து பார்ப்பார். மேலும், வகாலத்துப் பெருத வக்கீலாக தமது ஹ்ருதய குகையில் உள்ள, பகவானது ஸந்நிதிக் கோர்ட்டில் அவர்கள் சார்பாக ஆஜராவார். பகவானுகிற ஜட்ஜியிடம் அவர்களது இடுக்கண்களை நிவர்த்திக்கவும், அவர்களுக்கு பக்தியைப் புகட்டவும், இஹ-பர க்ஷேமங்களைப் பொழியவும் முறையிடுவார். எவ்விதம் ஆமை, பறவை, மீன்

முதலின முறையே ஸ்மரணை, ஸ்பர்சம், கண் முதலி யவைகளினால் தனது குஞ்சுகளைக் கார்க்குமோ, அவ் விதம் தனது சீஷர்களையும், அநுதாபிகளையும் தியா னம், தனது ஸமீபத்தில் அமர்ந்து ஜபத் தியானங் களை அநுஷ்டிக்கச் செய்தல், கடாக்ஷம் முதலிய வைகளினால் குஹதாஸ் கார்ப்பது ஸத்யம். மேலும், குஹதாஸ் "பிறருக்கு உரைப்பது போன்ற புத்தி மதி" (Indirect Advice)யை சில மனோநிலை உள்ளவர்களுக்கு உவமைகளினாலும், கதைகளினாலும் அளிப்பதுண்டு. அப்புத்திமதி நிரம்பவும் வேடிக்கை யாக இருக்கும். நெருங்கிய பந்துக்களும், சீஷர் களும் அப்புத்திமதிகளைப் பெற்று தங்களை சீர் செய்துகொள்ளுவதுண்டு.

**6. குஹதாஸ் உபதேசம் செய்யும் முறை:—** குஹதாஸ் இதுகாறும் தானாக ஒருவரையும் உபதே சம் செய்யவோ, போதனைகள் புரியவோ குஹாலயத் துக்கு அழைத்ததில்லை. யாராயினும் சரி பகவத்தாக முடன் தன்னிடம் வந்துவிட்டால் அவர்களினது மனோபீஷ்டங்களை மறுப்பதுமில்லை. துவந்துவ அலை களை மிருதியாகக் கொண்ட, ஸம்ஸார ஸாகரத்தி னின்று கரையேற, பேரின்பக் கடலில் ஸதா மூழ்க, இஹ-பர க்ஷேமங்களை அடைய அநுதபிக்கும் சீஷ

னது மனோநிலையை நன்கறிந்து குஹதாஸ் உபதேசிப்பார். சிஷன் வஸிக்கின்ற ஊரினது சீதோஷ்ணஸ்திதி, அவனது பரம்பரையினர்களினது உபாஸனை, அவனைச் சுற்றி வஸிப்பவர்களினது கர்மாக்கள், அவன் காலம் போக்கும் விதம், அவனது சரீர நிலை, மனப்ரவிருத்தி முதலியவைகளை நன்கு ஆராய்ந்து பிறகு உபதேசிப்பது வழக்கம். தன்னிடம் உபதேசம் அடையவிரும்பும் சிஷனை (இதுகாறும் பகவத் விஷயத்தில் ஈடுபடாதவனை) சரீரம், இந்திரியங்கள், மனம் இவைகளினது சுத்திக்காக முதலில் சில காலம் ராமாயணம், பாகவதம் முதலிய புராணங்களைக் கவனித்துப் பாராயணம் செய்யும்படியும், த்விஜனாக இருந்தால் காயத்ரீயை அல்லது ஒரு சுலோகத்தை அல்லது ஒரு வெண்பாவைக் குறைந்தது ஒரு மண்டலம் (45 தினங்கள்) ஏகாக்ர சித்தமுடன் பிரதிதினமும் சில நேரம் ஜபிக்கும்படியும் இவர் உரைப்பார். சில காலம் கிரமித்து அவனுக்கு உபதேசிப்பார். மேலும் குஹதாஸ் தமது ஸமாதி நிஷ்டையினின்று இறங்கியபிறகே உபதேசம் செய்வது வழக்கம். குஹதாஸ் தமது ஹ்ருதய கமலத்தில் குடிகொண்டுள்ள சின்மாத்ரப்பொருளைச் சிறிது நேரம் உணர்ந்தும், சிஷனைச் சாந்தமாக இருக்கச்செய்தும், தன்னால் சிஷனுக்கு உபதேசிக்கப்படுகின்ற அநுஸந்தான, அநுபவ

வாக்கியங்கள், மந்திராக்ஷரங்கள், ஆத்ம மந்திரம் முதலியன ஒவ்வொன்றையும் தான் முதன் முதலில் தன்னால் ஸதாகாலமும் உணரப்படுகின்ற அத்வைதப் பொருளுக்கு ஹ்ருதய பூர்வகமாக அர்ப்பித்தும், பிறகு சிஷனது மனத்தில் மந்திரங்கள், வாக்கியங்கள் முதலியன நன்கு பதியும்படிதான் பிரார்த்தித்தும், "உபதேசம் அடைய உபதேசிப்பது தாஸனது கடமை அல்ல. ஓர் தபால்காரன் போல் உனது அருளைச் சேர்ப்பிக்கின்றேன்" என ஸம்சயமின்றித் தான் உணர்ந்தும், சற்றும் அகம்பாவம் கொள்ளாதும், எங்கும் நிறைந்துள்ள பரம் பொருளினது ஓர் கருவியாகத் தன்னைப் பாவித்தும், எல்லாவற்றையும் அப் பொருளினிடம் அர்ப்பித்தும் பிறகு சிஷனுக்கு உபதேசம் செய்வார். மேலும், தன்னிடம் உபதேசம் பெற்றுள்ள சிஷர்களுக்கு நேரிலும், கடிதங்கள் வாயிலாகவும் பகவத் பக்தி செழிந்தோங்கி வளரவும், ஸகல உபத்திரவங்களும் நிர்மூலமாகவும் போதனைகள் செய்வதுண்டு. சமீபத்திலும், தூர இடங்களிலும் வஸிக்கும் சிஷர்களினது இஹ-பர க்ஷேமத்தின் பொருட்டுத் தானும் பிரார்த்திப்பார். மேலும், தனது எல்லாச் சிஷர்களையும் லோக க்ஷேமார்த்தம் பிரார்த்திக்கும் படியும், ஸஹோதர பாவத்தைப் பின்பற்றும்படியும், ஒருவருக்கொருவர் அவசியமான காலத்தில்

'உடல், பொருள், ஆவி'களினால் உதவி புரிந்துகொள்ளும்படியும் வற்புறுத்துவார். கூட, "ஒரு தெய்வத்தை, ஒரு கொள்கையை, ஒரு குருவை, ஒரு பாதையைப் பின்பற்று. மற்றவைகளை நேசி. பேத புத்தி வேண்டாம். எளிய வாழ்க்கையையும், உயர்நிலையையும் கைப்பற்று. பந்துவர்க்கம், நண்பர்கள், மண், பொன், அந்தஸ்து முதலியன நீர்மேல் குமிழிகளாகும். தபோதனத்தை ஸதா தேடு. ஸகல க்ஷேமங்களையும் அடைவாய்" முதலிய உத்தம அநுபவ வாக்கியங்களைச் சிஷ்யர்களினது மனங்குளிர மிகுந்த அன்புடன் குஹதாஸ் போதிப்பது வழக்கம். முடிவில், இவரிடம் பல கொள்கையினர்களும், பிரும்மசாரிகளும், கிருஹஸ்தர்களும், ஸந்யாஸிகளும் பகவத் விஷயமாகவும், அத்யாத்ம மார்க்கத்திலும் பல விதப் போதனைகளைப் பெற்றுள்ளார்களென்பதைப் பக்த உலகுக்கு அறிவிக்கின்றோம்.

**7. குஹதாஸ் காலம் போக்குவது:**--பாமரர்கள்' பந்துவர்க்கங்கள், அநுதாபிகள், சிஷ்யர்கள் — இவர்களில் ஒருவரும் குஹதாஸரிடம் நெருங்காமலிருந்தால், சம்பாஷணை செய்யாதிருந்தால் அவர் எக்காலும் மௌனத்தை அவலம்பிப்பார். அதிகாலை, மாலை, இரவு நேரங்களில் அத்யாத்ம நிஷ்டையில் இருப்பார். தினம் இருபத்திநான்கு மணிகளும் அந்

நிஷ்டையிலிருந்து எல்லா உலகங்களிலும், எல்லா தேசங்களிலும் உள்ள எல்லா ஜீவன்களுக்கும் ஸம்பூர்ணமாகக் கைங்கர்யம் செய்ய முடியவில்லையே என வருந்துவார். நடுப்பகலில் வம்ச பரம்பரையாக வந்துள்ள பஞ்சாயதன பூஜையையும், லோக க்ஷேமார்த்தம் குஹபரமாகத் தன்னால் வரையப் பட்டுள்ள அத்யாத்மயந்திர பூஜையையும் ஸஹஸ்ரநாம அர்ச்சனையுடன் செய்வார். சில தினங்கள் இவரது பூஜா காலத்தில் வேதம், உபநிஷத் பாராயணம் முதலியவைகளைப் பக்தர்கள் கோஷிப்பார்கள். இதற காலங்களில் பாராயணம், அநுபவக் கிரந்தங்கள் வரைவது, அநுதாபிகளுக்கு பகவத் விஷயங்களைப் போதிப்பது, சிஷ்ர்களுக்குச் சந்தேகங்களை நிவர்த்திப்பது, அத்யாத்மப் பாதையில் தைரியம் ஊட்டுவது, ஸங்கீதம், பஜனை மூலம் பகவானை ஸ்தோத்தரிப்பது, பெரியோர்களினது சரிதங்களையும், உபதேச மொழிகளையும் மனனம் செய்வது முதலிய ஸத்விஷயங்களைக் கவனிப்பார். மேலும், விளக்குகளைச் சுத்தம் செய்யல், வஸ்திரங்களைத் தோய்த்தல், சாக்கடையை அலம்பல், குப்பைகளைப் பெருக்கல் முதலான சிறிய காரியங்களை (Menial Services) பிறருக்குச் சிரமம் கொடாது தானே செய்வார். பக்தர்கள் எக்காலும் எல்லாக் காரியங்களிலும் வெளிச்

சுத்தம், உள் சுத்தம்—இவ்விரண்டையும் கைக்கொள்ளவேண்டுமென்பது இவரது பிரார்த்தனை. எல்லாச் சிறிய, பெரிய காரியங்களையும் ஓர் விதத் தியானத்துடனும், பகவதர்ப்பணத்துடனும் செய்வார். எந்நிலையிலும், எவ்வேளையிலும், எவ்வேலையிலும், எக்காலும் பகவானைக் காண்பது இவரது பேராவல். இவரிடமிருந்து நித்திராதேவி விலகிவிட்டனள் போலும். ஒரு விநாடியும் சோம்பலை அவலம்பியார். விருதாப் பேச்சு அவர் முன்னிலையில் நடைபெறாது. பகவத் விஷயமான ஸம்பாஷணைகளில் அவருக்கு நிரம்பவும் திருப்தி. மேலும், குஹதாஸ் தனக்கு விருந்து, உபசாரம், ஸ்தோத்திரம் முதலியன மிதமீறி நடைபெறும் காலத்திலும், தன் முன்னிலையில் மண், பொன், பெண், அந்தஸ்து, பதவி, வாதக்ஷிணை, சீர் வரிசைகள் முதலியன பற்றிப் பிறர்கள் ஆநந்தமாகப் பேசுங்காலத்திலும் வாடி வெதும்புவார். இவைகளைத் தனக்குத் தண்டனைகளாகப் பாவிக்கின்றனர் போலும். கூட, சில சமயம் நெருங்கிய பந்து வர்க்கங்கள், சிஷ்ர்கள்—இவர்களில் சிலர் சில விஷயங்கள் பற்றி ஸஹவாஸ தோஷத்தினுல் அல்லது பகவதாராதனைக் குறைவினுல் தன் முன்பு ஓர்வித அநாத்ம ஆவியைக் கிளப்பினுல் அச்சமயம் சற்றுநேரம் ஒத்துழையாமை (Non - cooperation)யை கைக்கொள்ளுவார். அவ்

வனுத்ம ஆவியை சாக்ஷி பூதமாக இருந்து கவனிப்பார். பிறகு, தான் மௌனமிருந்து, உபவாஸமிருந்து அவர்களிடம் (பந்துக்கள், சிஷ்யர்கள்) அநாத்ம அஸுரர்கள் இனி நெருங்காதிருக்கப் பிரார்த்திப்பார். சுருக்கமாக உரைக்கின், குஹதாஸ் பரம சாந்தர். படபடப்பு, துடிதுடிப்பு, சலிசலிப்பு, முணுமுணுப்பு, கடுகடுப்பு, பறந்து விழுதல், அவஸரம் முதலியவைகளை அவரிடம் காணமுடியாது. காமக் குரோதாதிகளான ஆறு சத்துருக்களுக்கும் அவரிடம் வேலையில்லை. விரிந்த உலகுக்கு 'உடல், பொருள், ஆவி'களினுல் தொண்டு புரிவதே அவரது உயர்ந்த உபாஸனை, ஆகையினுல் லோகக்ஷேமத்தை எக்காலும் எந்நிலையிலும் பிரார்த்தித்த வண்ணமாக அவர் இருக்கின்றனரென்பதை நாம் சொல்லத் தேவையில்லை.

சந்தன விருக்ஷத்தைச் சுற்றியுள்ள இதர மரங்கள் நல்வாஸனையைப் பெறும். க்ஷீரமுடன் கலந்த நீர் தூயவெண்மை நிறமாகும். மேரு பர்வதத்தை அண்டிய கருங்காகங்கள் ஸ்வர்ண வர்ணத்தை அடையும். இவைகளை ஒத்து நாஸ்தீகர்களும், கொடிய பாபிகளும், சோம்பேறிகளும் கூட இம்மஹானைப் போலொத்தவர்களை அண்டினுல் நற்கதி பெறுவார்களென்பது திண்ணம். உத்தம பக்தர்களைப் பற்றிச் சொல்லவேண்டுவதில்லை. இவரது நிஷ்டா காலத்

தில் சாந்தமாகச் சமீபத்தில் அமர்ந்து ஜபம், தியானம், பாராயணம் முதலிய ஸத் விஷயங்களை அனுஷ்டித்த பல பக்தர்கள் பகவதநுக்ரஹத்தைப் பல விஷயங்களில் ஸம்பூர்ணமாக அடைந்துள்ளனர்கள். உத்கிருஷ்டமான பல அநுபவங்கள் அவர்களுக்கு பல தடவைகளில் நேர்ந்துள்ளன. பாதையில் பல சந்தேகங்கள் போக்கடிக்கப்பட்டுள்ளன. இவைகளை விரித்து உரைக்க ஓர் தனிநூல் வேண்டும். மேலும், இவர் நிஷ்டையில் இருக்கும்போது இவரது ஹ்ருதயம், புருவங்களினது மத்தி முதலிய சில ஸ்தானங்களை நோக்கிய சில பக்தர்கள் தங்களது ஆனந்த உணர்ச்சியைக் கண்ணீர்த் தாரை வாயிலாகச் சொறிந்துள்ளனர்கள். இவ்விதமே சில பரமஹம்ஸர்கள், ஸந்யாஸிகள், பல அநுதாபிகள், பாமரர்களும் கூட இவரது ஸங்கீதம், பஜனை, அத்யாத்ம ஸம்பாஷணை முதலிய காலங்களில் ஆனந்தக் கண்ணீரை வெளியிட்டுள்ளதை நாமறிவோம். எக்காலும், எந்நிலையிலும், லோக க்ஷேமார்த்தமாகவும், பாமரர்கள், பாபிகள், நாஸ்தீகர்கள் முதலியவர்களும் கூட பகவத் விஷயத்தில் ஈடுபட்டு இஹ-பர க்ஷேமங்களை அடையவும், விரிந்த உலகில் ஸகல உபத்திரவங்களும் நிர்மூலமாகவும் குஹதாஸ் தமது மனமுருகிய பிரார்த்தனையினது ஆவியை அத்யாத்ம நிஷ்டை வாயிலாக பரம்

பொருளினிடம் ஸதா செலுத்திவருவதினால் மேற் கூறியவாறு எல்லோரும் ஓர் ஆனந்த உணர்ச்சியைப் பெற்று க்ஷேமமடைவது இயற்கையே.

8. **குஹாலயக் கோள்கைகள்** :-நாம் பிறந்துள்ள ஊர்கள் அனந்தம். நம்மைப் பெற்ற மாதா, பிதாக்கள் அனந்தம். நமக்கு உடன்பிறந்த ஸோதர ஸோதரிகள் அனந்தம். நம்மைச் சுற்றியுள்ள உறவினர்கள் அனந்தம். நம்முடன் பழகியுள்ள நண்பர்கள் அனந்தம். நமக்கு இடையூறுகள் தேடிய சத்துருக்கள் அனந்தம். நம்முடன் ரமித்துள்ள பெண்கள் அனந்தம். நமது ஜன்மாந்திரகர்மங்களினால் உடல்கள் அனந்தம். நம்மை உபத்திரவிக்கும் கொடிய வினைகள் அனந்தம். இவர்களை, இவைகளை நாளடைவில் நன்கு குறைக்க அத்வைதப் பொருளினின்று பூவுலகில் அவதரித்துள்ள நல்ல தெய்வங்கள் அனந்தம். அத்தெய்வங்களைத் தொழுகின்ற சமயங்கள் (cults) அனந்தம். அச்சமயங்களைப் பின்பற்றுகின்ற பக்தர்கள் அனந்தம் ஓர் உதாரணம் உரைப்போம். சமீபத்திலுள்ள ஓர் சிறிய கிராமத்துக்குப் பலர் பல பாதைகள் வாயிலாகப் போகின்றார்கள். வெகு தூரத்திலுள்ள, பெரிதுக்கும் பெரிதான ஓங்கார நகருக்குள்ள பாதைகள் எவ்வளவென ஆதிசேஷனாலும் வர்ணிக்க முடியாது.

ஆகையினால் நீண்டகண்ட உலகின்கண் பல தெய்வங்கள், பல மதங்கள், பலகொள்கைகள், பல பக்தர்கள், பல உபாஸனைகள், பல அனுஷ்டானங்கள் முதலியன பல யுகங்களாக இருந்து வருவதை ஒருவனும் ஓராதாரத்தினாலும் புறக்கணிக்க முடியாது. "குஹாலயம்" என்பதை எடுத்துக் கொள்ளுவோம். இஃது புதிதாகக் குஹதாஸரினால் சிருஷ்டிக்கப்படவில்லை. பிராசீனங்களிலும் பிராசீனம் தான். குஹாலயம் ஒவ்வொரு ஜீவனது ஹ்ருதய குஹையின் கண் குடிகொண்டுள்ளது. அக் குஹையினது மத்தியில் குஹன் வஸித்துள்ளனர். அக்குஹனை அத்யாத்ம வழியாக வழிபடுகின்ற யாவரும் குஹதாஸர்கள் தாம். ஆகையினால் எல்லா மதத்தினர்களும், கொள்கையினர்களும், உபாஸனையினர்களும் குஹாலயத்தைச் சேர்ந்த பக்தர்களே ஆவார்கள். அவ்விதமே குஹாலய பக்தர்கள் யாவரும் எல்லா மதத்தினர்களையும், கொள்கையினர்களையும், உபாஸனையினர்களையும் சேர்ந்தவர்கள் தாம். ஒருவரும் ஒரு ஆதாரத்தினாலும் "தான் குஹாலயத்தைச் சேர்ந்தவனல்லன்" என உரைக்க முடியாது. நர ஜன்மம் எடுத்தவன் "நான் மானிடனல்லன்" எனக் கூற முடியுமா ? இக்காரணங்களினால் குஹதாஸ் உள்ளிட், வெளியிலும், கீழும், மேலும் பரிணமித்துள்ள

பிரபஞ்சம் முழுவதும் "குஹாலயம்" எனவும், அப் பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்தவனும், பரிபாலிப்பவனும், அதற்கு க்ஷேமங்களை வர்ஷிப்பவனும் "குஹன்" எனவும், அக்குஹனை ஹ்ருதயவாயிலாக ஆராதிப்பவர்கள் எல்லோரும் "குஹதாஸர்கள்" எனவும் ஓர் ஆழ்ந்த பாவனையுடன் உபாஸித்து வருகின்றனர். இப்பாவனை மேன்மேலும் ஸ்திரப்படத் தனது இல்லத்தை (ஸ்ரீ ஜகத்குரு அநுக்ரஹித்தபடி) "குஹாலயம்" எனவும், தனது பெயரைக் "குஹதாஸ்" எனவும் அவர் அழைத்துக்கொள்ளுகின்றனர் போலும். அவருக்கு ஓர் மதத்திலும், கொள்கையிலும், உபாஸனையிலும், அநுஷ்டானத்திலும் பேதபுத்தி, நிந்தனை, அஸூயை, பின்புறம் கடித்தல் முதலியனக் கினவிலும் கிடையாது. "எல்லா ஜீவன்களும் பகவானை, பரம் பொருளைப் பக்தி வாயிலாக ஹ்ருதய குஹையில் உபாஸிக்க வேண்டும். இதன் மூலம் இஹ-பர க்ஷேமங்களைப் பெறவேண்டும். இப்பிறவியிலேயே மறு பிறவியை எரிக்கவேண்டும்" என இவருக்கு ஓர் பேராவல் உண்டு. மேலும், எல்லா மதத்தினர்களும், கொள்கையினர்களும் அவைகளை வெளியிட்ட தங்கள் தலைவர் (President Founders) களினது உபதேசங்களை நம்பிக்கையுடன் பின்பற்றி, நிஷ்காமியமாகப் பகவானை உபாஸித்து, பாதையில் நேரிடுகின்ற

சித்திகளை வெறுத்து, தங்கள் கடமைகளை நன்கு அனுஷ்டித்து, பிற ஜீவன்களை ஸஹோதர-ஸஹோதரிகளாகப் பாவித்து, அவர்களுடைய கஷ்டங்களைத் தங்களுடையதாக உணர்ந்து, அவர்களுக்கு 'உடல், பொருள், ஆவி'களினால் உபகரித்து, எல்லோரும் எல்லா க்ஷேமங்களையும் அடைய ஹ்ருதய பூர்வமாகப் பிரார்த்தித்து வரவேண்டுமெனக் குஹதாஸருக்கு ஓர் ஆழ்ந்த பிரார்த்தனை உண்டு. சுருக்கமாக உரைக்கின், ஜீவயாத்திரீகர்களான எல்லா மதத்தினர்களுக்கும், கொள்கையினர்களுக்கும், உபாஸனையுள்ளவர்களுக்கும் திரிகரணங்களினாலும் கைங்கரியம் செய்வது தான் "குஹாலயக் கொள்கைகள்" என நன்கறியலாம். மேலும், குஹாலயத்தில் ஒரு விதத்திலும் "அதி ரஹஸ்ய" வியாபாரங்கள் கிடையாது. பகவானும், பகவானை வழிபடுவதும், வழிபடும் பாதையும் ஸகல ஜீவன்களுக்கும் உடன்பிறந்த விஷயங்களாகுமல்லவா? இக்கொள்கையினர்கள் பதக்கங்கள், பட்டங்கள் (Pendants, Titles etc), விருதுகள், மற்றுமுள்ள வேஷங்கள், ஆடம்பரங்கள் முதலியவைகளை ஆபரணங்களாக உபயோகியார்கள். தாஸ பாவத்தை ஆசிரயிப்பார்கள்; உணர்வார்கள்; அநுஷ்டிப்பார்கள்.

**9. குஹாலய தர்மங்கள் :**—குஹதாஸ் சென்ற 1914-வது ஆண்டில் ஆங்கில வைத்தியக் கலாசாலை யில் சேர ஆவல்கொண்டு அதற்குத் தேவையுள்ள நூல்களைப் படித்தனர். குடும்ப பாரம், ஸங்கீதம், ராஜீயம் முதலியன அக்கலாசாலையில் இவர் பிரவே சியாது தடுத்துவிட்டன. அவ்வருஷ முதல் இவர் தர்ம வைத்தியம் செய்யத் தொடங்கினர். சராசரி தினம் 15 வியாதியஸ்தர்கள் தேவையுள்ள மருந்து களை இவரிடம் பெறுவார்கள். காலரா, கொடிய ஜ்வரம் (Influenza) முதலிய தொத்து வியாதிகள் தாண்டவமாடுங் காலத்தில் தினம் சராசரி நூறு வியா தியஸ்தர்கள் அன்புடன் கவனிக்கப்படுவார்கள். சில சமயம் வியாதியஸ்தர்களினது வீடுகளுக்கு இரவில் போய் கவனிக்கவும், மருந்துகள் கொடுக்கவும் சில குஹாலய பக்தர்கள் போவார்கள். "இனி பிழைப் பது அரிது" எனக் கைவிடப்பட்ட பல வியாதியஸ் தர்கள் சௌக்கியமடைந்துள்ளனர்கள். மனோ வியா தியுள்ளவர்களும் சில முறைகளினுல் சௌக்கியம டைந்துள்ளார்கள். மேலும், சில சமயம் இவர் சில தர்ம வைத்தியசாலைகளுக்கு மருந்துகள் தர்மமாக அனுப்புவதுண்டு. சரீர ரோகத்தினுலும், மனோ வியாதியினுலும் கஷ்டப்படுகிறவர்களுக்குத் தன்னுலா கக்கூடிய உபகாரத்தைச் செய்வது ஓர் உத்தம உபாஸ

ணயே என்பது குஹதாஸரது கருத்து. சில சமயம் தனது சீஷர்களுடன் பொது வைத்தியசாலைகளில் பிரவேசித்து, ஒவ்வொரு வார்டிலும் போய் வியாதியஸ்தர்கள் சௌக்கியமடைய இவர் பிரார்த்திப்பதுண்டு. சில வியாதியஸ்தர்களுக்கு விபூதி, துளஸீ, மிளகு, குளிர்ந்த நீர் முதலியவைகளைத் தியானம் செய்து கொடுப்பார். தூர தேசங்களில் வஸிக்கின்றவர்களினது வியாதிகள் சமனமடையப் பகவானை இவர் பிரார்த்திப்பதுமுண்டு. வியாதிகள் வாராது தடுக்கும் பொருட்டும், அவைகள் நிர்மூலமடையவும் விருப்பமுள்ளவர்களுக்கு ரக்ஷைகள் (Amulets) கொடுப்பதுண்டு. மேற்கூறியுள்ளபடி மருந்து, விபூதி, ரக்ஷை முதலியன கொடுப்பதுடன் "பகவானை எவ்விதத்திலாவது வழிபடுவதே மிகச் சிறந்த ஔஷதம்." என அவர் உரைப்பது வழக்கம்.

மேலும், பஜனை கோஷ்டி, வேத கோஷ்டி, ஆலயங்கள், பக்தர்களும், அநுபவிகளும் நிறைந்துள்ள ஆச்ரமங்கள், மடங்கள், ஏழைகள், ரோகிகள், பௌராணிகர்கள், துறவிகள் முதலியவர்களுக்குத் தமது சக்தியை மீறித் திரவிய சகாயம் மனமுடன் செய்வார். பற்பல தர்மஸ்தாபனங்களினது அபிவிருத்தியின் பொருட்டு பக்திரஸம் ததும்பிய பல சங்கீதக் கச்சேரிகள் பல இடங்களில் இவர் செய்துள்ளனர்,

ரே, "அறஞ் செய விரும்பு" எனும் ஸூத்ரத்தைப் பின்பற்றுவார். இவரது சிபார்சு வாயிலாகப் பலர் பல பதவிகளை அடைந்துள்ளனர்கள். ஒன்று இவ் விடம் கூறுவோம். சிலர் பதவி ஏற்றதும் இவரை மறப்பதுண்டு. சிலர் 'தங்களது கௌரவம் குறைந்து விடும்' என்றெண்ணிப் பதவிகள் தங் களைத் தேடி வந்ததாகவும் உரைப்பதுண்டு. சிலர் இவரினால் உரைக்கப்பட்ட "பகவானை வழிபடு. உன்னை எந்நிலையிலும் காப்பர்" முதலிய வாக் கியங்களை நினைக்கச் சங்கோஜப்படுவதுமுண்டு. "அஹத்தினது அழுக்கு முகத்தில் தெரியும்" எனும் ஸூத்ரப்படி அவர்களின் கெட்ட எண்ணங்களினது அலைகளை இவர் உணர்ந்தாலும் அவைகளை மறப்பார். மேலும், ஜீவன்கள் நற்கதி அடையும் பொருட்டு குஹாலயப் பிரசுரங்களில் பல காப்பிகள் பல ஏழ் மைப் பக்தர்களுக்கு இனமாக விநியோகிக்கப்பட் டுள்ளதை நாம் குறிப்பிடுவோம். இவரது மிதமீறிய தர்மங்களினால் இவரது செல்வம் நாளடைவில் குறை ந்து வந்தாலும் இவரது தர்மம் பல வகையில் பாவித் தான் வருகின்றது. சுருக்கமாக உரைக்கின், குஹ தாஸ் உடல், பொருள், ஆவிகளுடன் கஷ்டப்படு கின்றவர்களுக்காகப் பாடுபடுகின்றவராவர். பிறர்களி னது கஷ்டங்களைக் காணச் சகியார். அவர்கள் சிரமப்

படுவதைத் தம்முடையதாக உணர்வார். அவர்களின் க்ஷேமங்களுக்காகப் பிரார்த்திப்பார்.

**10. குஹாலய உற்சவங்கள்:—** ஸ்ரீ ராமநவமி, கோகுலாஷ்டமி, சாரதா நவராத்திரி, ஸ்கந்த ஷஷ்டி முதலிய புண்ணிய தினங்களும், ஸ்ரீ சங்கராச்சாரியார், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர், ஸ்ரீ சாரதாமணி தேவி, ஸ்வாமி விவேகாநந்தர், ஸ்ரீ ரமண மஹரிஷி, ஸ்ரீ அரவிந்தர், ஸ்ரீ சிவாநந்தர் முதலிய மஹான்களினது ஜயந்தி (பிறந்த தினம்) உற்சவங்கள் ஒவ்வொரு வருஷமும் கொண்டாடப்படுகின்றன. அன்று தினமுழுவதும் பக்தர்கள் பகவத் விஷயமாகவே காலத்தை விநியோகிப்பார்கள். அன்றைய தினம் குஹாலய பக்தர்கள் அதிகாலையில் நீராடி, குஹாலயத்தில் கூடி ஜபம், த்யானம், நிஷ்டை முதலிய ஆந்தரீக விஷயங்களை அநுஷ்டிப்பார்கள். பிறகு பூஜை, ஸஹஸ்ரநாம அர்ச்சனை, வேத கோஷம், பாராயணம் முதலிய பஹிர் விஷயங்களில் ஈடுபடுவார்கள். பிறகு, பக்தர்களுக்கு ஸமாராதனை நடைபெறும். போஜனத்துக்குப் பிறகு, மேற்கூறப்பட்டுள்ள அவதாரங்களினது, மஹான்களினது முறையே அநுக்ரஹங்களினது, உபதேசங்களினது முதலியன பற்றி பக்தர்களினால் உபந்யாஸங்கள் நடைபெறும். மாலையில் ஜபம், த்யானம், நிஷ்டை முதலியன நடைபெறும். பகவா

னுக்குக் கற்பூர ஹாரத்தி எடுக்கப்படும். இரவில் பக்தர்கள் சொற்ப ஆகாரம் எடுப்பார்கள். பிறகு பஜனை, பக்திரஸம் ததும்பிய ஸங்கீதக் கச்சேரி முதலியன நடைபெறும். எல்லாம் லோக க்ஷேமார்த்தமாகவும், சாந்தமாகவும், பகவதர்ப்பணமாகவும் நடைபெற்ற பிறகு பகவத் பிரஸாதம் பக்தர்களுக்கு விநியோகிக்கப்படும்.

**II. குஹாலயப் பிரசுரங்கள் :—** குஹதாஸரது லக்ஷ்யம் தமது ஹ்ருதய குஹையிலுள்ள அத்வைதப் பொருளின்கண் ஸதா "நீ வேறெனாது நான் வேறெனாது" எனக் கலந்திருப்பதே. அக்நிலையினின்று நழுவிய காலங்களில் உலகின் க்ஷேமார்த்தம் தனது அநுபவங்களைக் கிரந்தங்கள் வாயிலாக வெளியிடச் சென்ற 1923-வது ஆண்டில் ஓர் புறத்தில் ஓர் ஆவல் கொழுந்து விட்டெறிந்தது. மற்றொரு புறத்தில் "யுகந் தோன்றினது முதல் பல மஹான்கள் அவதரித்து நேரிலும், கிரந்தங்கள் வாயிலாகவும், உபதேசம் செய்தும், போதனைகள் புகட்டியும், உபந்யாசங்கள் புரிந்தும், சம்பாஷணை செய்தும் — இவைகளை ஆயுதங்களாக வைத்துக் கொண்டு அதர்மங்களை அகற்றி, தர்மங்களைப் பறைசாற்றி, நாஸ்தீகர்களுக்கு நல்வழி காட்டி, ஆஸ்தீகர்களுக்குப் பக்தி புகட்டி, ஸத்யப் பொருளை எங்கும் நிலைநாட்டி இருக்கின்றனர்

கள். அவ்வநுபவிகளினது உபதேச மொழிகளை எல்லாம் அநுஷ்டானத்துக்குக் கொண்டுவர யுகக் கணக்கான வருஷங்கள் தேவையே. நரனது ஆயுள் காலம் மிகச் சொற்பமே. கால்பாகம் பால்ய, யௌவனங்களிலும், கால்பாகம் வார்த்திகத்திலும், கால்பாகம் நித்திரையிலும் சென்று விடுகின்றதே. நமக்கோ 25-வருஷங்கள் மாத்திரம் த்வந்துவங்களை பலவகையாகக் கொண்ட இம்மாயாப் பிரபஞ்சத்தின்கண் பாக்கியாக உள்ளன. ஏன், நமக்கு (பிரசுரங்களை வெளியிடும்) இவ்வேலை? உலக க்ஷேமார்த்தம் நாம் தியானவாயிலாகப் பரம்பொருளை ஹ்ருதய பூர்வகமாகப் பிரார்த்திப்பது போதும்'' எனும் ஓர் கவலை அவரை வாட்டியது. இந் நிலையில் சுமார் மூன்று வருஷகாலம் அவர் தபித்தனர். 1925-வருஷம் டிஸம்பர் மாதம் ஸஞ்சாரத்திலிருந்த காஞ்சீகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசந்திரசேகரேந்திர ஸரஸ்வதீ அவர்களை புதுக்கோட்டை ஸமஸ்தானத்தில் இவர் தர்சனம் செய்ய பகவத் ஸங்கல்பமாக நேர்ந்தது. ஸ்ரீஜகத்குரு குஹதாஸரை இரண்டுமாதகாலம் தன்னுடன் தங்கும்படி ஆக்ஞாபித்தனர். பிரதிதினமும் ஸ்ரீஜகத்குருவும், குஹதாஸரும் ஏகாந்தமாக அத்யாத்ம விஷயங்கள் பற்றி ஒருவருக்கொருவர் வாய்விட்டு ஆநந்தத்துடன் பேசுவார்கள்; பிரபஞ்சத்தில் ஜீவன்கள் பெரும்பாலும் ஸத்ஸங்கத்தை, அநுப

விகளை, பகவானை, பரம்பொருளை நாடாது உத்தம நர ஜன்மத்தைப் பாழாக்குகின்றனர்களே என இவ்விருவர்களும் அழுவதுமுண்டு. ஒரு தினம் "பல நாளாக அத்யாத்ம விஷயங்கள் பற்றி நாமிருவரும் ஏகாந்தத்தில் ஸம்பாஷணை செய்ததை உனது அனுபவங்களைத் துணையாகக் கொண்டுப் பக்த உலகில் அவச்யம் வெளியிடவேண்டுமென" ஸ்ரீஜகத்குரு குஹதாஸரை வற்புறுத்தினர். ஊர் வந்து சேர்ந்ததும் குஹதாஸ் "அத்யாத்ம யோகம்" எனும் தமது முதல் நூலை வரைய ஆரம்பித்தனர். மேலும் சில தினங்களுக்குப் பிறகு திருச்சினுப்பள்ளியில் ஜில்லா ஜட்ஜாக இருந்த தமது ஆப்த நண்பர் ஸ்ரீ K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகளைக் குஹதாஸ் சந்தித்தனர். ஸ்ரீ சாஸ்திரிகள் அன்புடன உரைத்தது பின்வருமாறு :—

ஸ்ரீ ஜகத்குருவினது ஆஞ்ஞையைப் பின்பற்றி, பகவானுக்கு அர்ப்பித்த உனது அத்யாத்ம அனுபவங்களைக் கிரந்தங்கள் வாயிலாக பல ஜீவன்கள் நற்கதியை அடையும் பொருட்டு வெளியிடுவது அவசியம். எல்லா மதத்தினர்களும், கொள்கையினர்களும், பக்தர்களும் உனது அனுபவங்களையும், லோக க்ஷேமார்த்தமான ஆழ்ந்தபிரார்த்தனையையும் மெச்சுவார்கள்; அநுஷ்டிப்பார்கள்.

இவ்விதமாக ஸ்ரீ ஜகத்குருவினது வாக்கியங்களை ஸ்ரீ சாஸ்திரிகள் ஆமோதித்தனர். இவ்விருவரும் உரைத்த வார்த்தைகள் குஹதாஸரது கவலையைப் போக்கின. நாமும் ஒன்று இவ்விடம் உரைப்பது பொருந்தும். குஹதாஸரது அனுபவ நூல்கள் பக்த உலகில் வெளிவந்த பிறகே தாஸனைப் போலுள்ள பல பக்தர்கள் பக்தியுடன் குஹாலயத்தையும், குஹதாஸரையும் பின்பற்றியுள்ளோம். மேன் மேலும் பக்தர்கள் பெருகி வருகின்றனர்கள். ஆகையினால் குஹதாஸரினால் வெளியிடப்பட்டுள்ள அநுபவ நூல்கள் ஸர்வ சக்தி வாய்ந்த பகவானால் ஒப்புக்கொள்ளப்பட்டவைகள் தாமெனப் பக்த உலகு முன்பு பறைசாற்றுவோம். இன்னும் சில சுருக்கமாகப் பக்தர்களுக்கும், பாமரர்களுக்கும் அறிவிப்போம். ஸ்ரீ குஹதாஸ் இயற்றியுள்ள எல்லாப் பிரசுரங்களிலும் அநுபவங்கள் நிறைந்துள்ளன. அவைகள் எளிய தமிழ் நடையில் உள்ளன. ஸ்ரீ ஜகத்குரு, ஸ்ரீ ரமண மஹரிஷி, ஸ்ரீராமாநந்த ஸரஸ்வதீ — இம்மஹான்களினது உபதேசங்களும், அநுக்ரகமும் பெற்றுள்ளன. பல பக்தர்கள், ஞானிகள், யோகிகள், உத்தியோகஸ்தர்கள், அட்வகேட்டுகள், வித்யா நிபுணர்கள், வைத்ய நிபுணர்கள் முதலியவர்களினாலும், பல பத்திரிகைகள், ஜில்லா போர்டுகள், கலாசாலைகள், வாசகசாலைகள் முதலிய

வைகளினாலும் நன்கு போற்றப் பட்டுள்ளன. [குறிப்பு :—குஹாலயப் பிரசுரங்களினது விபரம் "ஸ்ரீ ஸுப்ரம்மண்ய ப்ரஸந்ந மாலா மந்திரம்" நூலின் கடைசியில் அறிவிக்கப்பட்டுள்ளது. ஷ பிரசுரங் களைப் போற்றியுள்ள பத்திரிகைகள், உத்தம பக்தர் கள், முதலியவர்களினது பெயர்கள் அங்கு குறிக் கப்பட்டுள்ளன.] அழகிய காகிதத்தில் சுத்த மாக அச்சிடப்பட்டுள்ளன. பகவத் விஷயத்தில், அத்யாத்ம யாத்திரையில் ஈடுபட்டுள்ள, ஈடுபட அநுதபிக்கின்ற உத்தம சோதர - சோதரிகளுக்கு தேவையுள்ளவைகள். எல்லா ஜாதியினர்களுக்கும், மதத்தினர்களுக்கும், கொள்கையினர்களுக்கும், உபா ஸனையினர்களுக்கும் ஓர் துணையாக உள்ளவைகள். எல்லா வித்யாசாலைகளுக்கும், வாசகசாலைகளுக்கும் அவசியமுள்ளவைகள். மேலும், உத்தம பக்தர்கள் இப்பிரசுரங்கள் வாயிலாக அத்யாத்மப் பொருளின் கண் ஈடுபடலாம். ஓங்கார நகரை நாடலாம். பகவா னது பாதகமலத்தைப் பிடிக்கலாம். மாயையை ஒழிக்கலாம். பேரின்ப ஸாகரத்தில் ஆடலாம். ஸகல இஹ-பர க்ஷேமங்களை அடையலாம்.

ஷ **பிரசுரங்களினது விபரம் :—** இதுகாறும் குஹாலயத்திலிருந்து வெளிவந்துள்ள அத்யாத்மப்

பிரசுரங்கள் எட்டாகும். அவைகளில் அடங்கியுள்ள விஷயங்கள் பின்வருமாறு :—

(1) **அத்யாத்மயோகம் அல்லது ஆத்மப் பயிற்சி :** "ஸர்வ வல்லமையுள்ள கடவுள், அத்யாத்ம யோகம், ஸங்கீதம், பஜனையின் அவசியம், ஆச்சாரியர், சிஷன், சரீரப் பயிற்சி, பிரும்மசரியம், ஆகாரம், ஆஸநம், பிராணாயாமம், ஐகாக்கிரியம், தியானம், ஸமாதி, பிரார்த்தனை." முதலிய 15 அத்தியாயங்கள் உள்ளது.

(2) **தாஸனது ஆத்மாநுபவம் :**—(முதல் பாகம். அத்யாத்ம யாத்திரை) "அர்ப்பணம், பிரார்த்தனை, ஜீவன் அடையவேண்டிய நிலை, ஆச்சாரிய விஷயம், தைரியம் ஊட்டல், ஜபம் செய்யும் விதம், தியான முறைகள், ஸமாதி, தியான—ஸமாதி பலன்கள், ஆத்மப் பொருளினது அபயம், அத்யாத்ம அநுபவிகள், இவர்களினது சக்தியின் பரிணமிப்பு, பலவித அநுபவங்கள், திட நம்பிக்கை, பலவித பிரார்த்தனைகள், அநுஸந்தானம், ஆத்ம மந்திரம், பலவித விருத்திகள், மந்திரப் பரிகாரம், ஸ்வராஜ்யம், மௌனம், ஜபமாலை, விக்ரஹ ஆராதனை......" முதலான 135 அநுபவ விஷயங்கள் அடங்கியது.

**(3, 4, 5)** **நாரத பக்தி ஸூத்ரம், பஜகோவிந்தம், ஆத்மாநு ஸந்தான க்ரமம்.** நாரத **பக்தி ஸூத்ரத்தில்** "பக்தியினது அவசியம், அதனது உயர்வு, ஸ்வரூபம்,

அநுபவிகளினது ஸங்கம், அநுஷ்டான முறைகள், பகவானது அருள்'' முதலியன பற்றி கோஷிக்கப்பட்டுள்ளன. பஜகோவிந்தம் எனும் நூலில் "பலவித ஆசைப்பேய்கள், அகங்கார அஸுரர்கள், சிற்றின்பச் சுழல்கள்'' முதலானவைகளை நிர்மூலம் செய்வது பற்றியும், அத்யாத்ம நிலையை அடைவது பற்றியும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆத்மாநுஸந்தான க்ரமத்தில் ஓர் முறையாக 17 அத்யாத்ம விஷயங்கள் உபநிஷத்துகள், பக்தி நூல்கள் முதலியவைகளினின்றும் எடுத்துக் கோர்க்கப்பட்டுள்ளன. இந்த 17 விஷயங்களும் ஜீவ யாத்திரீகர்களை 17 ஆயுதங்களாக நின்று காக்கும். நாகரத்தில் மூலமும், தமிழ் மொழி பெயர்ப்பும் உள்ளன.

(6) **ஸ்ரீ ஸுப்ரம்மண்ய ப்ரஸங்நமாலா மந்திரம்:** இந்நூல் பாராயண முறையுடன் கூடியது. இதன் பாராயண வாயிலாக எல்லா இடையூறுகளும் நிவர்த்தியாகும். ஸகல இஹ-பர க்ஷேமங்களையும் அடையலாம். அத்யாத்ம வழியைப் பின்பற்றலாம். நாகரம், தமிழ் லிபிகளில் உள்ளது.

(7) **பூஜா விதானம்:**—(குஹ பரம்) அத்யாத்மப் பொருளின்கண் ரமிக்க அத்யாத்மரீதியாக வரையப்பட்டுள்ளது. நாகரம், தமிழ் லிபிகளில் உள்ளது.

(8) **குஹாலயமும், அதன் கொள்கைகளும்:—** குஹதாஸரது போதனைகளுடன் கூடியது. ஜீவ யாத்திரீகர்கள் அனுஷ்டிக்கவேண்டிய பல விஷயங்கள் உடையது.

(9) **ஓங்கார த்வஜமும் படமும்:—** இவ்விரண்டும் வெண்மையான கதர் துணியிலும், ஆர்ட்டுப் பேபரிலும் சுமார் 10×7 அங்குல அளவில் நன்கு அச்சிடப்பட்டுள்ளன. குஹாலய கோஷ்டியில் சேர்ந்துள்ள ஸ்ரீ குரு குஹதாஸ் (S. G. S. சர்மா) எனும் ஒரு பக்தருக்கு தியான காலத்தில் நேர்ந்துள்ள அநுபவ ரீதியாக பிரசுரிக்கப்பட்டுள்ளன. இவைகள் ஜபத் தியான காலங்களில் உதவி செய்யும.

**சீக்கிரம் வெளிவரும் குஹாலயப் பிரசுரங்கள்:—** [**குறிப்பு:** இதுகாறும் பிரசுரிக்கப்படாது அச்சுக்குத் தயாராக உள்ள கீழ்கண்ட ஆறு அநுபவப் பிரசுரங்களும் பறந்த உலகின்கண் சீக்கிரம் வெளிவரவும், இவைகள் வாயிலாக எல்லாச் சோதர-சோதரிகளும் அத்யாத்ம மார்க்கத்தில் ஹ்ருதய பூர்வகமாக ஈடுபடவும், இஹ-பர க்ஷேமங்கள் யாவற்றையும் அடையவும் குஹாலயத்தில் உபதேசம் பெற்றுள்ளவர்களும், குஹாலயப் போஷகர்களும், மற்றுமுள்ள பக்தர்களும் 'உடல், பொருள், ஆவி'களுடன் சற்று பிரயாசை எடுக்கக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்கள்.]

(1, 2) **தாஸனது ஆத்மாநுபவம்:— 2, 3**-வது பாகங்கள். அத்யாத்ம தர்மம், அத்யாத்ம மாலா எனும் பெயர் உள்ளவைகள். சுமார் **185** அநுபவ விஷயங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

(3) **குஹதாஸ் ஜீவிய சரிதம்:—** (தமிழ், இங்கிலீஷ்) சில குஹாலய பக்தர்களினது விருப்பப்படி குஹதாஸராலேயே கோர்க்கப்பட்டுள்ளது. இவரது பிறப்பு, வளர்ப்பு, பால்ய பக்தி, துவந்துவப் பிரபஞ்சத்தின்கண் பட்டபாடுகள், குருபக்தி, பகவானது அருள், 'ஜகாக்ரிய, தியான, ஸமாதி' வாயிலாக எட்டியுள்ள அத்யாத்மப் பொருளின்கண் ஸதாரமிப்பு, உலகின் க்ஷேமார்த்தம் இவர் பாடுபடுவது முதலியன அடங்கியுள்ளது.

(4, 5) **ஸங்கீதம்:—**(**1**. Music: Theory. **2**. Music Practice) **2**. பாகங்கள். தமிழ், இங்கிலீஷ் பாஷைகளில் உள்ளவைகள். **1-வது பாகத்தில்** "மோக்ஷ வித்யையான ஸங்கீதம், அதனது உயர்வு, அதனது வியாபகத்தன்மை, அதன் உபயோகம், பல தேசங்களினது ஸங்கீத ஒற்றுமை, சங்கீதம் பயிலுபவனது நல்நடைகள், ஸங்கீதம் கற்பிக்கும் விதம், அதன் சீர்திருத்தம்" முதலிய **15** அத்தியாயங்கள் வரையப்பட்டுள்ளது. **2-வது பாகத்தில்** சுமார் **200** பாக்கள் (பயிற்சி பாடங்கள், மேளகர்த்தா விபரம், பல

ராகங்களினது ஆரோஹண - அவரோஹணங்கள், பல்வித தாளங்கள், வர்ணங்கள், த்யாகப் பிரும்மம் முதலான பல மஹான்களினது கீர்த்தனங்கள், மற்றுள்ள அநுபவிகளினல் ஸாஹித்யம் செய்யப்பட்டுள்ள கிரந்தம், தமிழ், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி, மராட்டி, இங்கிலீஷ் முதலிய பாஷைகளிலுள்ள பாக்கள் முதலியன) பாமரர்களும் எளிதில் அறிந்து அப்பியசிக்கும்படியாக ஓர்வித ஸங்கீதக் குறிப்பில் (Indian Tonic - Solfa Notation) வரையப்பட்டுள்ளன. ஓர் உணர்ச்சியுடன் பாடும்படியாக எல்லாப் பாக்களுக்கும் நேரான அர்த்தம் அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டு பாகங்களிலும் பல அத்யாத்ம விஷயங்கள் பக்தர்களுக்குப் புலப்படும். பீடாதிபதிகள், ராஜாக்கள், ஸங்கீத வித்வான்கள், வித்யா நிபுணர்கள், பக்தர்கள், ஆங்கிலேயர்கள் முதலான பலரினுல் இவ்விரு நூல்களும் பார்வையிடப்பட்டு போற்றப்பட்டுள்ளன.

(6) **பஜனை பத்ததி** :—நாகரம், தமிழ் முதலிய லிபிகளில் உள்ளது. தமிழ், கிரந்தம், மராட்டி, ஹிந்தி முதலான பாஷைகளில் பல அநுபவிகளினுல் பாடப்பட்டுள்ள சுமார் 200 பாக்கள் எல்லோரும் பாடும்படியாகவும், அத்யாத்ம ரீதியாகவும் கோர்க்கப்பட்டுள்ளது. ஜீவயாத்திரீகர்களினது அநுஸந்தானத்துக்கு இந்நூல் நிரம்பவும் உதவியளிக்கும்.

**12. கிரந்தகர்த்தாவினது முடிவுரை :**—பகவதருள் பிரவாஹத்தைப் பின்பற்றி ஒருவாறு சுருக்கமாக "குஹாலயமும் அதன் கொள்கைகளும்" எனும் விஷயத்தைப் பக்த உலகுக்கு அறிவித்துவிட்டோம். பக்தர்களினது அநுஸந்தானத்துக்காகவும், ஞாபகத்துக்காகவும் குஹாலயத்தில் நடைபெறும் எல்லா விஷயங்களும் பற்றிச் சுருக்கமாக அறிவிப்பது தாஸனது கடமை. அவைகள் பின்வருமாறு :—

(1) **உபதேசம், போதனைகள் :**— குஹாலயத்தில் அத்யாத்ம விஷயமாகவும், பகவத்விஷயமாகவும் உபதேசமும், போதனைகளும் பக்தர்களுக்குக் குஹதாஸ் அவர்களினால் செய்யப்படுகின்றன. உபதேசம் பெற்றுள்ளவர்களும், அநுதாபிகளும் நேரிலும், கடித மூலமாகவும் போதனைகளைப் பெற்றுவருகின்றனர்கள்.

(2) **பிரசுரங்கள் :**—அத்யாத்ம யோகம், பஜனை, ஸங்கீதம் முதலியன பற்றி பிர[illegible]ரங்கள் வெளியாகி வருகின்றன.

(3) **உற்சவங்கள் :**—தெய்வங்களினது புண்ய தினங்களும், மஹான்களினது ஜயந்திகளும் வருஷந்தோறும் கொண்டாடப்படுகின்றன.

(4) **தியானம், பூஜை முதலியன.** காலை, மாலை, இரவு காலங்களில் ஜபம், த்யானம், ஆத்ம நிஷ்டை

முதலிய ஆந்தரீக ஆராதனைகளும், நடுப்பகலில் பூஜை, ஸஹஸ்ரநாம அர்ச்சனை, பாராயணம் முதலான பஹிர் ஆராதனைகளும் நடைபெற்று வருகின்றன.

(5) **பஜனை, ஸங்கீதம்:**—பக்தி ரஸம் ததும்பியுள்ள பஜனை, ஸங்கீதக் கச்சேரி, வேத கோஷம் முதலியன விசேஷ தினங்களில் நடைபெறுகின்றன.

(6) **தர்மங்கள்:**—ஏழைகளுக்கு மருந்துகள் இனமாகக் கொடுக்கப்படுகின்றன. வேத கோஷ்டி, பஜனை கோஷ்டி, ஆலய உற்சவம் முதலியவைகளுக்குத் திரவிய ஸகாயம் செய்யப்படுகின்றன. பொது ஸ்தாபனங்களினது அபிவிருத்தியின் பொருட்டு சங்கீதக் கச்சேரி, பஜனை, உபந்யாஸம் முதலியன நடத்தப்படுகின்றன.

(7) **புஸ்தக கோசம்** (Library) யோகக்கிரந்தங்கள், புராணங்கள், அநுபவிகளினது சரித்திரங்கள், ஸங்கீதம் முதலியன பற்றிப் பல நூல்கள் ஆங்கிலம், தமிழ், ஸம்ஸ்கிருதம், தெலுங்கு, கன்னடம், மராட்டி, ஹிந்தி முதலிய பாஷைகளில் சேகரிக்கப்பட்டுள்ளன.

(8) **பிரசாரம்:**— மேற்கண்டுள்ள விஷயங்கள் பற்றி உபந்யாசம், பஜனை முதலியன பக்த உலகில் பக்தர்களினுலும், பண்டிதர்களினுலும் செய்யப்படு

கின்றன. பெரியோர்களினது உபதேசங்கள் பக்த உலகில் பரவச் செய்யப்படுகின்றன.

[குறிப்பு:--மேற்கண்டுள்ள எல்லா விஷயங்களும் சாந்தமாகவும், நிஷ்காமியமாகவும், பகவதர்ப்பணமாகவும், லோகக்ஷேமார்த்தமாகவும் அனுஷ்டிக்கப்படுகின்றன.

॥ लोकाः समस्ताः सुखिनो भवन्तु ॥

---

## குஹாலய போஷகர்கள்.

[குறிப்பு:—அடியில் குறிப்பிட்டுள்ள மஹான்களும், உத்தம பக்தர்களும் பல வருஷங்களாக பல விதங்களில் "அத்யாத்ம யோகம், ஸங்கீதம், பஜனை, இவைகளினது பிரசுரங்கள், பிரசாரம்" முதலியன குஹாலயத்தில் நடைபெற்று வருவதற்கு 'உடல், பொருள், ஆவி'களினால் உதவி புரிந்து வருவதை பகவானது பாதகமலத்தில் ஸமர்ப்பிக்கின்றோம்.]

1. காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதீ அவர்கள்.
2. புஷ்பகிரி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு.
3. சிவகங்கை ராஜா.
4. எட்டையாபுறம் ராஜா.

5. ஜெயப்பூர் மஹாராஜா.
6. Sir C. P. ராமஸ்வாமி அய்யர், திவான், திருவனந்தபுறம்.
7. திவான்பகதூர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகள் (Retd Dt Judge) சென்னை.
8. திவான்பகதூர் K. ஸுந்திரம் செட்டியார் (Retd High Court Judge) சேலம்.
9. ஸ்ரீ T. ஸுந்திரமய்யர் (Retd Dt Judge) சேலம்.
10. ,, T. L. ஸுப்பய்யர், B.A , B.L., திருக்கருகாவூர்.
11. ,, P. S. விச்வநாதய்யர், B.A., B.L., நாகபட்டணம்.
12. ,, A. V. லக்ஷ்மணய்யர், B.A., B.L., திருப்பூர்.
13. ,, A. P. S. M. சின்னய்யா செட்டியார், புதுவயல்.

---

## குஹாலய கோஷ்டியினர்கள்.

[குறிப்பு:— அடியிற்கண்ட பக்தர்கள் குஹாலயத்தில் உபதேசம் பெற்றுள்ளவர்கள். இந்த † அடையாளம் குறிக்கப்பட்டுள்ள பக்தர்கள் **போஷகர்களும்** ஆவார்கள்.]

**சேங்காலிபுரம்** (தஞ்சாவூர் ஜில்லா)

1. ஸௌ. தய்யம்மாள் (Mrs. குஹதாஸ்)
2. ,, லக்ஷ்மீ (Mrs. N. S. K. அய்யர், B.A., L.T.,)
†3. சிவதாஸ் (M. R. N. அய்யர்)
4. ஸௌ. லக்ஷ்மீ (Mrs. சிவதாஸ்)
†5. மஹாதேவதாஸ் (S. V. M. அய்யர்)
6. ஸௌ. லக்ஷ்மீ (Mrs. மஹாதேவதாஸ்)
7. S. N. வைத்யநாத தீக்ஷிதர்.
8. ஸௌ. காமாக்ஷி (Mrs. S. N. V. தீக்ஷிதர்)
9. R. மஹாலிங்கமய்யர்.
10. ஸஹோதரி கமலத்தம்மாள்.
11. S. M. வைத்யநாத சிவம்.
12. S. V. சாமிநாத அய்யர்.
13. S. V. தியாகராஜ அய்யர்.
†14. ராம்தாஸ் (உ. வே. S. P. அய்யங்கார்).
15. வைதீக தர்மஸம்ரக்ஷக, ப்ரவசனதுரீண S. அநந்தராம தீக்ஷிதர்.
16. ஸௌ. ஞானம் (Mrs. N. S. V. அய்யர்)

**தஞ்சாவூர்.**

†17. S. ஸோமஸுந்திரமய்யர், (Engr Dept)
18. ஸௌ. ஸாவித்திரி (Mrs. S. S. Iyer.)
19. ஸஹோதரி. ராஜம்மாள்.

20. ஸஹோதரி ஸம்பூர்ணத்தம்மாள்.
†21. R. ஸுப்ரம்மண்ய அய்யர் (Engr. Dept)
†22. ஆத்மாராம் தாஸ் (G. S. அய்யங்கார், Edl. Dept.)

## கும்பகோணம்.

23. V. S. கிருஷ்ணசாமி அய்யர் (Hanuman Bank.)
24. ஸௌ. மங்களம் (Mrs. V. S. K. அய்யர்.)
25. ஸஹோதரி சாந்து அம்மாள்.
26. N. கிருஷ்ணமூர்த்தி அய்யர்.
27. T. R. கிருஷ்ணமூர்த்தி அய்யர் (C. F. Bank)
28. ஸௌ. ரங்கத்தம்மாள்.
29. M. ஸுப்ரம்மண்ய அய்யர் (வியாபாரி)
30. ஸௌ. ஸுந்திராம்பாள் (மேலக்காவேரி)

## திருச்சினுப்பள்ளி.

31. ஸஹோதரி. விசாலாக்ஷி அம்மாள்.
†32. T. U. லக்ஷ்மண தாஸ், B.A., (T.U.L. Iyer)
33. ஸௌ. தய்யு (Mrs. T. U. L. தாஸ்)
34. ஸஹோதரி கிருஷ்ணம்மாள்.
35. T. M. பரத அய்யர்.
36. T. M. சாமினுத அய்யர்.

37. ஸௌ. ஸரஸ்வதீ (Mrs. T. M. S. அய்யர்)
†38. R. கிருஷ்ணமூர்த்தி அய்யர் (Postal Dept.)
39. ஸௌ. செல்லம்மாள் (Mrs. R. K. மூர்த்தி அய்யர்)
40. R. வெங்கடஸுப்ரம்மண்ய அய்யர் (M.E.S)
41. K. ராமய்யர் (Police Dept.)
42. M. கிருஷ்ணமூர்த்தி அய்யர் (Ry. Dept.)
43. V. காமேச்வர அய்யர் (Edl. Dept.)
44. ஸௌ. செல்லத்தம்மாள் (சந்திர விலாஸ்)
45. பெரியசாமி பிள்ளை.
46. சங்கிலியா பிள்ளை (Ry. Dept.)
47. **ஸ்ரீரங்கம்.** பாலஸந்யாஸி.
48. ,, பெருமாள் செட்டியார்.

**கோயம்பத்தூர்.**

†49. S. நரஸிம்ம அய்யர், M.A., (Dt. Bd. Engr. Office)
50. ஸௌ. லக்ஷ்மீ அம்மாள் (Mrs.S.N. அய்யர்)
51. ,, ராமலக்ஷ்மீ.
52. R. ஸுப்ரம்மண்ய அய்யர் (Elec. Dept.)
53. ஸௌ. ஸரஸ்வதீ (Mrs. R. S. அய்யர்)

**புதுக்கோட்டை.**

†54. R. சாமிநாத அய்யர்
55. ஸௌ. ஞாநாம்பாள், (Mrs. R. S. Iyer.)

56. K. அனந்தராம அய்யர், B.A.B.L.,
57. G. K. ராமசந்திர அய்யர், M.A., B.L.,
58. மலயப்ப அய்யர் (Teacher)
59. ரங்கஸாமி அய்யர் (State Press)
60. S. நாராயணசாமி அய்யர்.
61. ஸஹோதரி. பிரஹதாம்பாள்.
62. G. ஸுந்திரமய்யர்.
63. சேலம். K. R. ராதாகிருஷ்ண அய்யர்,B.L.,
64. ,, S. N. ராமமூர்த்தி அய்யர் (Clerk.)
65. ஈரோடு. காந்தம்மாள்.
66. லால்குடி. N. ராதாகிருஷ்ண நாயுடு.
67. உடையார்பாளயம். சஞ்சீவி நாய்க்கர்.
68. நாமக்கல். S. நாராயணசாமி அய்யர்.
69. கிருஷ்ணகிரி. M. P. வைத்தினாத ஆச்சாரி.
70. மைசூர். D. பாலகிருஷ்ணன்.
†71. பங்களூர். M. ராமஸ்வாமி அய்யர் (Military Dept.)
72. ,, ஸௌ. ஜானகி.
73. மதுரை. P. S. ஸுப்ரமண்ய அய்யர் B.L.,
74. சென்னை. T. V. வெங்கட்டராம அய்யர் (Postal Audit Dept.)
75. G. V. ஸுப்ரம்மண்ய அய்யர் (Engrs. & Contractors)

76. சென்னை A.P. சாஸ்திரி Insurance Dept.
77. பேஸவாடா. ஸீதாராம சௌதரீ.
78. திருவனந்தபுரம். T. S. வைத்தினாத அய்யர்.
79. காசீ. (Benares) நாராயண சாஸ்திரிகள்.
80. ,, C. ராமஸ்வாமி அய்யர்.
81. லாகூர். (Lahore) சாமன்லால் (Chaman Lal. Asst. Acct. General)

## தஞ்சை ஜில்லா.

82. தேதியூர். T. S. நாராயணஸாமி அய்யர்.
83. மாந்தை. அய்யாசாமி அய்யர்.
84. வடுவக்குடி. V. N. சாமினாத அய்யர்.
85. கோனேரிராஜபுறம். ஸௌ. ஸாவித்திரி.
86. சேதினீபுறம். R. நடராஜ அய்யர்.
87. அதம்பாவூர். V. ஸுந்திரமய்யர்.
88. அரசவனங்காடு. A. V. ஸுப்ரம்மண்யய்யர்.
89. போலகம். கோபால அய்யர்.
90. ஆடுதுறை. R. மஹாலிங்கய்யர் (C.F. Bank)
91. திருச்சுறை. நாகராஜ பிள்ளை (மிருதங்கம்)
92 குடவாசல். சாரநாத பிள்ளை (நாதஸுரம்)
93. நார்ணமங்கலம். நாராயணசாமி அய்யர்.
94. சித்தமல்லி. ஸீதாராம அய்யர்.
95. நடார். ராமமூர்த்தி அய்யர்.

96. சிதலைப்பதி. S. அப்பாசாமி அய்யர்.
97. சுமிழி. R. கிருஷ்ணமூர்த்தி அய்யர்.
98. ,, M. S. கோபால அய்யர்.
99. அகரப்பேட்டை. A. S. பஞ்சாபகேசய்யர்.
100. ,, ஸௌ. ஸரஸ்வதி (Mrs. A.S.P. அய்யர்)
101. ,, P. கோபால அய்யர்.
102. முடிகொண்டான். S. நடேச அய்யர்.
103. ,, ஸஹோதரி. ஸுந்தரத்தம்மாள்.
104. ,, S. N. ராம அய்யர்.
105. புலியூர். ஸௌ. மீனாக்ஷி அம்மாள்.
†106. ,, P. S. ஸுப்ரம்மண்ய அய்யர்.
†107. ,, P. S. நாராயணசாமி அய்யர்.
108. ,, P. M. கிருஷ்ணசாமி அய்யர்.
109. ,, P. M. கோபாலசாமி அய்யர்.
110. புலிவலம். S. கிருஷ்ணமூர்த்தி அய்யர்.

## திருச்சி ஜில்லா.

†111. ஸ்ரீராம ஸமுத்திரம். A. S. நடேச அய்யர்.
112. ,, ஸௌ. செல்லம்மாள்.
113. ,, N. ஸுப்பராம அய்யர்.

## புதுக்கோட்டை.

114. கல்லாலங்குடி. V. ஸுப்ரம்மண்ய அய்யர்.
115. புதுப்பட்டி. V. நாராயணசாமி அய்யர்.

116. திருமணஞ்சேரி. 'காசி' ஸுந்தரமய்யர்.
†117. ,, குருகுஹதாஸ் (S. G. S. சர்மா)
118. ,, மாணிக்கம் பிள்ளை.
119. லக்ஷ்மீபுறம். சாமிநாத அய்யர்.
120. ,, ஸௌ. ஹம்ஸலக்ஷ்மி.

## சேலம் ஜில்லா.

121. ஆனையாம்பட்டி. O. S. கிருஷ்ணசாமி அய்யர் (Teacher.)
122. அம்மன்பாளயம். ஸுப்ரம்மண்ய அய்யர்.

---

## பக்தர்களினது உதவி.

[குறிப்பு:—"குஹாலயமும், அதன் கொள்கைகளும்" எனும் இந்நூல் பக்த உலகின்கண் விரைவில் வெளிவரும் பொருட்டு பக்தர்கள் உள்ளன்புடன் சேர்ப்பித்த தொகையை அடியில் வரைந்துள்ளோம். அப்பக்தர்கள் யாவருக்கும் ஸர்வ சக்தி வாய்ந்த பகவான் இஹ-பர க்ஷேமங்களைப் பொழியட்டும்.]

| | | |
|---|---|---|
| R. சாமிநாத அய்யர், புதுக்கோட்டை. | | ரூ. 100 |
| சிவதாஸ் | சேங்காலிபுரம் | 60 |
| ராம்தாஸ் | ,, | 15 |
| S. V. மஹாதேவதாஸ் | ,, | 10 |
| ஓர் ஸ்கந்த பக்தர் | திருச்சிறுப்பள்ளி | 15 |
| R. கிருஷ்ணமூர்த்தி அய்யர் | ,, | 10 |

| | | |
|---|---|---|
| T. U. லக்ஷ்மண தாஸ் | ,, | 5 |
| T. M. பரதய்யர் | ,, | 5 |
| ஸஹோதரி. பிச்சம்மாள் | ,, | 5 |
| P. S. நாராயணசாமி அய்யர், புலியூர் | | 15 |
| P. M. கிருஷ்ணசாமி அய்யர் | ,, | 3 |
| P. M. கோபாலசாமி அய்யர் | ,, | 2 |
| A. S. நடேசய்யர், ஸ்ரீராமஸமுத்திரம் | | 20 |
| A. P. S. M. சின்னய்யா செட்டியார், புதுவயல் | | 10 |
| குருகுஹதாஸ், திருமணஞ்சேரி | | 10 |
| V. நாராயணசாமி அய்யர், புதுப்பட்டி | | 5 |
| ஸௌ. ஸாவித்திரி, கோனேரிராஜபுரம் | | 5 |
| T. S. வைத்யநாத அய்யர், திருவனந்தபுரம் | | 3 |
| D. பாலகிருஷ்ணன், மைஸூர் | | 2 |
| S. ஸோமஸுந்தரமய்யர் தஞ்சாவூர் | | 9 |
| R. ஸுப்ரம்மண்ய அய்யர் | ,, | 5 |
| G. ஸந்தானமய்யங்கார் | ,, | 1 |
| | மொத்தம் ரூ. | 315 |

॥ शुभमस्तु ॥

P.R